# பாரத மணி

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்"

—பாரதி

ஆசிரியர் : கே. எஸ். வேங்கடரமணி.

| மாலை 3 | ஞாயிறு 15-10-39 பிரமாதி௵ புரட்டாசி௴ 29உ | முத்து 3 |
| --- | --- | --- |

## பொருள் அடக்கம்

| விஷயம் | | பக்கம் |
| --- | --- | --- |
| *பிரிட்டிஷ் மந்திரி சபையின் கடமை* | ... ... ... ... | 66 |
| *நமஸ்காரம்* | ... ... ... ... ... | 68 |
| *குறிப்புகள்* | ... ... ... ... ... | 69 |
| *சுருதி மண்டலத்தின் சௌடால் கச்சேரிகள்* | ஸ்ரீ மஹாலிங்க சாஸ்திரி | 70 |
| *ஸர்க்கஸ்* | திவான் பகதூர் கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரி | 73 |
| *கவிச் செல்வம்* | ... ஏ. என். கலியாணசுந்திரம் | 74 |
| *தக்ஷிண திலகம்* | ... வரகவி. திரு. அ. சுப்ரமண்ய பாரதி | 77 |
| *'அவர் தவறவே இல்லை !'* | ... ... வே. ரா. சுந்தரராமன் | 81 |
| *புத்தக விமர்சனம்* | ... ... ... ... ... | 85 |
| *மளிகைக்கடை மாணிக்கம் செட்டி* | ... ... ஜி. பாலசுப்ரமண்யம் | 87 |
| *கிராம சேவை* | ... ராவ்சாகிப் கே. சுப்ரமண்யம் | 89 |
| *சிறுவர் பகுதி* | ... ... ...ஆர். ஜே. ராமன் | 93 |
| *சினிமாச் சுருள்* | ... ... ... ... ... | 96 |

*"பாரத மணி" யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் குறிப்பிடும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.*

# பிரிட்டிஷ் மந்திரி சபையின் கடமை

நல்ல மரத்திற் புல்லுருவி பாய்ந்து அழிப்பதுபோல் எல்லா ஏகாதிபத்தியத்துக்கும் அழிவை ஏற்படுத்துவது அடிமைத்தனம்தான். ஒரு கிளையில் புல்லுருவி முளைத்திருந்தாலும் அது மரம் முழுவதும் பீடிப்பதுபோல் உலகில் ஓர் அடிமை நாடிருந்தாலும் அது அரசியல் வாழ்க்கைக்குப் புல்லுருவி போல் ஆகும். இந்த ஒரு நாட்டின் அடிமைத்தனமே சண்டை சச்சரவுகளுக்கு மூல வேராக ஆகிவிடுகிறது. ஒரு பெரிய யந்திரத்தில் ஒரு கைப்பிடி மணலை வாரி இறைத்தால் யந்திரம் வேலை செய்யுமா? குடம் எண்ணெயை விட்டாலும் வேலை செய்யாது. இணையில்லாத ரோமன் ஏகாதிபத்யம் அழிந்ததற்குக் காரணமென்ன? அதன் அஸ்திவாரம் பிறநாட்டின் அடிமைத் தனத்திலும் தன் நாட்டின் அடிமை வேலையிலும் முழுவதும் சார்ந்து நின்றது. அதுவே அதற்கு அழிவாக முடிந்தது. அப்படியே பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம்கூட இந்தியாவின் அடிமைத்தனத்தில் தானே பிழைத்து வருகிறது? இன்னும் ஆழமாய் வேரூன்றி வெடிப்புக் காண்பதற்கு முன் நாம் சீர்திருத்தம் செய்து இருவரும் அரசியல் நேர் வாழ்க்கைக்கு வேண்டிய ஒப்பந்தங்களைச் சீக்கிரம் செய்துகொள்ளவேண்டாமா?

ஒரு தேசத்தின் அடிமைத்தனம்தான் உலக யுத்தங்களுக்கே உண்மையான காரணமாகும். ஆகையால் இப்பொழுது இந்தியாவின் விடுதலை ஏற்படாமல் உலகத்தில் சமாதானம் எப்படி ஏற்படும்? இதைச் சிலர் நன்கறிந்தே அரசியல்துறையில் பல காலமாகப் பாடுபட்டு வருகிறார்கள். எட்மண்டு பர்க் நாள் முதற்கொண்டு இந்தியாவின் விடுதலையையும் க்ஷேமத்தையும் கோரி இங்கிலாந்திலே பாடுபடுகிறவர்கள் சிலர் உளர். ஆனால் அவர்கள் சொல் பிரிட்டிஷ் மந்திரி சபைக்கு ஏறுகிறதில்லை. சுய நலத்தையே எண்ணி இது வரையில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் நடத்தி வரப்படுகிறது. இந்த சம்பிரதாயம் தான் இப்பொழுது பிரதம மந்திரியாயிருக்கும் நெவில் சேம்பர்லேனுக்கும் மிக்க ஒத்தாசை. இந்தப் பழக்கமும் வழக்கமும் மாறினால் தான் பிரிட்டிஷ் அரசாங்கம் ஜனநாயகக் கொள்கைகளை ஒப்புக்கொள்கிறதென்று சொல்லலாம்.

காங்கிரஸ் காரியக் கமிட்டி தங்கள் தீர்மானங்களை ஆலோசனை செய்து கம்பீரமாக வெளியிட்டு மூன்று வாரங்கள் சென்றும் அதற்குத் தக்க பதில் பிரிட்டிஷ் மந்திரி சபை இன்னும் நமக்கு அளிக்கவில்லை. இந்தியா மந்திரி ஜெட்லண்டு பிரபு மாத்திரம் வழக்கம் போல நயமில்லாத கடினமான ஓர் பிரசங்கம் செய்திருக்கிறார். அதனால் இருவருக்கும் நஷ்டமே யொழிய லாபமில்லை. போலந்தை விடுதலை செய்யச் சண்டைக்குத் தயாராயிருக்கிற பிரிட்டிஷ் ஜன நாயகம் தன் வீட்டிலேயே அடிமையாய்ச் சங்கிலியினால் பிணைக்கப்பட்டு நிற்கும் இந்தியாவை எப்படி மறக்கக்கூடும்?

ஆனால் நமது மனோ பாவத்தையும் கிளர்ச்சியையும் புத்துயிரையும் கொஞ்சம் நன்றாயறிந்த நமது வைஸ்ராய் லின்லித்கோ பிரபுவிடம் நமக்குக் கொஞ்சம் நம்பிக்கை யிருக்கிறது ஆனால் அவர் ஒரு பிடிவாதமாய்ச் சொன்னாலொழிய பிரிட்டிஷ் மந்திரி சபைக்கு அவர்கள் தற்காலமிருக்கும் மனப்பாங்கில் நமது சுயேச்சை விஷயம் ஏறாது. ஐரோப்பா சம்பந்தப்பட்ட வரையில் ஒருவித நடத்தை, இந்தியா சம்பந்தப்பட்ட வரையில் மற்றொரு வித நடத்தை. இந்த அரசியல் புரட்டினால்தான் உலகத்தில் கஷ்ட நஷ்டங்கள் ஏராளமாய் ஏற்படுகின்றன.

போலந்துக்குக் கை கொடுத்துத் தூக்கிவிடுகிறேனென்று வாக்குத் தத்தம் கொடுத்த பிரிட்டிஷ் ஜன நாயகம் இந்த யுத்த சமயத்தில் இந்தியாவை எப்படி

நடத்தப் போகிறது என்பதுதான் உலகம் முழுவதும் கேட்கும் கேள்வி. ஒவ்வொரு நாட்டின் சுயாட்சி அழியக்கூடாது என்ற கொள்கையை அநுசரித்துப் போலந்துக்குப் போய் அதை யுத்தத்துக்குக் கிளப்பி விட்ட பிரிட்டிஷ் ஜன நாயகம் இந்தியா சம்பந்தப்பட்ட வரையில் வேறு எவ்விதம் நடந்துகொள்ள முடியும்?

கடமை இவ்வளவு தெளிவாயிருந்தும் மூன்று வாரங்களாக (ஜெர்மனி போலந்தை விழுங்கின காலம்) பிரிட்டிஷ் மந்திரி சபை மௌனத்தைச் சாதித்துக் கொண்டு வருகிறது. ஆனல் செல்வாக்குள்ள சில பிரிட்டிஷ் பத்திரிகைகள் இந்தியா விஷயத்தில் இந்த நெருக்கடியில் தெளிவாயும் கம்பீரமாயும் தலையங்கங்கள் வெளியிட்டிருக்கின்றன. இந்தியாவின் சுயேச்சைக்கும் சமஷ்டிக்கும் எவ்வளவு சிரமங்கள் இருந்தாலும் அவைகளைத் தீர்த்து வைக்க இருதரப்பிலும் வேண்டியது இரண்டுதான் — விசால புத்தியும் பரஸ்பர அன்பும் தான் — என்று ஒரே முறையாகத் தலையங்கங்கள் கூறுகின்றன.

ஆனல் தலையங்கங்களால் என்ன பயன்? தலையங்கங்கள் தலைவர்களின் தலையை ஒரு நாளும் திருப்பினதாகத் தெரியவில்லை. பிரதம மந்திரி சேம்பர்லினின் மனப் பாங்கும் பிரிட்டிஷ் மந்திரி சபையின் அற்ப நோக்கமும் குறுகின புத்தியும் நமக்கு இடையூருக நிற்குமோ வென்று நாம் பயப்படுகிறோம். இதனல்தான் இங்கிலாந்து ருஷ்யாவின் உதவியையும் ஸ்நேகத்தையுமிழந்து கஷ்டத்தையும் யுத்தப் பெருக்கத்தையும் உண்டு பண்ணிவிட்டது. லாய்டு ஜார்ஜ் விஷயம் தெரிந்து சொன்னபடி ருஷ்யாவின் ஒத்தாசையை உறுதிப்படுத்திக் கொள்ளாமல் நீங்கள் எப்படிப் போலந்துக்குக் கண்ணை மூடிக்கொண்டு 'கியாரண்டி' செய்தீர்கள்? இது முட்டாள்தனம் மாத்திரமல்ல; அரசியலில் பைத்தியம். ஆங்கில ஆரசியலில் பொருளேயே தெய்வமாகக் கொண்டாடும் ஒரு "கன்ஸர்வேடிவ்" வகுப்பின் ஸ்வயநல அபிப்பிராயமே விழல்போல் ஓங்கி வளர்ந்து பயிரை அடித்து வருகிறது. இந்த மனப்பாங்கு மாறவேண்டும். இல்லாவிட்டால் ருஷ்யாவை இழந்ததுபோல் இந்தியாவையும் இழக்கும்படி நேரலாம். இனிமேல் ஒருவரும் இந்தியாவுக்கு இயற்கையாய்க் கிடைக்க வேண்டிய சுயேச்சையைத் தடுக்க முடியாது. தடுத்தால் நஷ்டம் தான். வீண் கிளர்ச்சிக்கும் வாதத்திற்கும் இடமாகும். கால தாமதமும் கூடாது.

பிரிட்டிஷ் மந்திரி சபை உடனே இந்தியாவுக்கு உள்ள சுயேச்சை உடைமையை "டிக்ளரேஷன்" செய்து அதைக் கையோடு மத்திய சர்க்காரில் அமுலுக்கும் கொண்டு வரவேண்டும். நாங்கள் வார்த்தைகளால் திருப்தியடைந்த காலம் போய்விட்டது. காரிய ரூபமாய் உண்மையை யறிய விரும்புகிறோம். காங்கிரஸ், முஸ்லிம் லீக் இதர வகுப்புகளுள்ளும் இந்தியாவின் அடிமைத் தனம் ஒழிந்து விடுதலை யடைய வேண்டுமென்பதில் வேற்றுமை ஒரு நாளும் கிடையாது. ஆகையால் நாமெல்லாரும் ஒன்றுகூடி, பகீரதன் கங்கையைக் கொண்டு வந்தது போல் கஷ்டப்பட்டுத் தவம் செய்து தியாகம் செய்து நமது நாட்டின் சுயேச்சையைக் கொண்டு வரவேண்டும். வண்டித் தொடருக்கு இன்ஜின்போல், காங்கிரஸ் முன்னின்று தொண்டு புரியவேண்டும்.

கே. எஸ். வேங்கடரமணி

# நமஸ்காரம்

தமிழில் ஆர்வங்கொண்டு கட்டுரைகள் கதைகள் எழுதும் எழுத்தாளர்களுக் கோர் நமஸ்காரம். அவைகளை அன்புடன் வாசிக்கும் நண்பர்களுக்கோர் நமஸ்காரம். இவர்களிருவரையும் உற்சாகமூட்டிய "வெள்ளைக் கலையுடுத்தி, வெள்ளைப் பணி பூண்ட" தமிழ்த்தாய், அன்னை கலைவா ணிக்கோர் நமஸ்காரம். இவர்களுக்கெல்லாம், காரணபூதனும், கர்த்தாவாயும் இருக்கும் சர்வக்ஞன் பரமாத்மாவிற் கோர் நமஸ்காரம். இவர்களுக்கெல்லாம் நமஸ்காரஞ்செய்யும் நம் "பாரதமணி," தமிழ் வருஷப் பிரகாரம் வருகிற விஜய தசமியன்று ஒரு வயதுக் குழந்தையாகிறது.

நம் நாடு குழந்தைகளின் வியாதிக்குப் பெயர்போன நாடு. காரணம் குழந்தைகளைச் சரிவர சவரட்சணை செய்யாதது தான். குழந்தை நிலத்தில் விழுந்ததும் அத்துடன் வியாதி என்னும் அழுக்கு உடனே பாய்ந்து வந்து ஒட்டிக்கொள்கிறது. சிசுக்கள் இவ்வியாதிகளிடமிருந்து தப்பித்துக்கொள்வது துர்லபம். அப்படி தப்பிப் பிழைத்தாலும் ஒன்றிரண்டு வருஷங்கள் பிழைக்கவுமாட்டாமல் சாகவு மாட்டாமல் தத்தளித்துப் பெற்றோர்க்ளுக்குத் துன்பத்தையும் கஷ்டத்தையும் கொடுத்து விட்டுப் பிறகு வந்த வழியே செல்கிறது. பெற்றோர்கள் எவ்வளவு கஷ்டப்பட்டிருந்தாலும் சிசு இறந்துபோனால் மனந்தாளா துக்கத்தை யடைகிறார்கள். உலகில் இது சகஜம். இதுபோல்தான் பத்திரிகையும். விஸ்தரிப்பில் மனக் கஷ்டந்தான் கண்ட பலன்.

தமிழ் நாட்டில் பத்திரிகை முன்னுக்கு வராதது தமிழ் நாடுதான் முக்கிய காரணம். "தமிழா உணர் உணர்" என்றும் "தமிழா விழித்தெழு" என்றும், "கல்வி சிறந்த தமிழ் நாடு, உயர் கம்பன் பிறந்த தமிழ்நாடு" என்றும் பிரயோஜன மற்ற வார்த்தைகளையே சொல்லிக் கொண்டு திரிகிறார்களேயொழிய எவராவது தமிழுக்கு உண்மையுடன் உழைப்பவர்களுக்கு ஆதரவு காட்டுகிறார்களா?

பத்திரிகைத் தொழிலில் முன்னேற்ற மடைந்த மேல்நாட்டைச் சற்றுப் பார்ப்போம். இங்கிலாந்தில் கணக்கிடமுடியாத பத்திரிகைகள் வெளியாகின்றன. எல்லாப் பத்திரிகைகளுக்கும் ஆதரவுகள் கிடைக்கின்றன. அங்குள்ள புஸ்தகாலயங்களுக்குமட்டும் அனுப்பினால்போதும். அங்கேயுள்ள ஒவ்வொரு புஸ்தகாலயங்களும் பாஷையை முன்னேற்றமடையச் செய்வதில் கண்ணுங்கருத்துமாக இருக்கின்றன. ஆனால் நம் நாட்டிலோ பெரிய மனிதர்கள்கூட தமிழ் பத்திரிகைகள் வாங்க பயப்படுகிறார்கள். அதிலுள்ள அழுக்கு அவர்களுடைய மயில்கண் அங்க வஸ்திரத்தில் பட்டு விடுமோவென அஞ்சுகிறார்கள். இப்படியிருக்கும் நாட்டில் உண்மையாய் உழைக்கும் பத்திரிகைக்கு எங்கிருந்து வரும் ஆதரவு? பொது ஜனங்களுடைய ஆதரவு பத்திரிகைக்குப் பரிபூரணமாக இருக்குமானால் அது உலகத்திற்குக்கூட அஞ்சவேண்டிய அவசியமில்லை. இங்கிருந்து அங்காரக உலகத்திற்குப் பத்திரிகை யனுப்பக்கூடிய சக்தியும் தைர்யமும் இருக்கும்!

உங்களுடன் இவ்வளவு நேரம் பேசி உங்களை அங்காரக உலகத்திற்கு அழைத்துக்கொண்டு சென்று விட்டேன். மன்னிக்கவும். ஒரு விஷயம். பாரதமணியின் முதல் வருஷ பூர்த்தியைக் குதூகலத்துடன் எல்லோரும் கொண்டாடும் வண்ணம் ஓர் ஆண்டு மலர் வெளியாகப்போகிறது. பலர் பார்ப்பதற்குக் குளிர்ச்சியாக இருக்கும், வாசனை கமகமவென்றடிக்கும், கண்ணில் ஒற்றிக்கொள்ளலாம் போலிருக்கும். கிராமாந்தரத்தில் புது ஜலங்கலந்த சேற்றில் பிறந்த தாமரை மலரல்லவா, அம்மலரை அன்பர்கள் நிச்சயம் வாங்குவார்களென நம்புகிறோம். "வாங்குவார்களெ" னச் சொல்வதே போல அதோ பாரதமணியும் கணீரென்றடிக்கிறது.

# பைத்திய மயம் ஜகத்

"ஊருக்கு ஓர் பைத்தியக்காரன்" என்று சொல்வது உலக வழக்கு. இதை நிரூபிக்க இச்சமயந் தவிர வேறு சமயம் வாய்ப்பதரிது! 'நியூஸ் கிரானிகிள்' 'டெய்லி ஹெரால்டு' முதலிய பத்திரிகைகள் இந்தியாவில் இருக்கும் நிலைமையை உணர்ந்து, "இச்சமயம் இந்தியாவிற்கு வேண்டியதைக் கொடுத்தால்தான் நமக்கு நன்மை, காங்கிரஸ் கேட்பதெல்லாம் கொடுத்துவிட வேண்டும். இல்லாவிடில் அபாயந்தான்," என்று எழுதும் பொழுது ஓர் பத்திரிகை மட்டும் மண்டையில் மூளையில்லை என்று எல்லோரும் அறிய ஏதோ தத்துப்பித்து என்னு உளறியிருக்கிறது.

"காந்தி என்ன ஆசாமி? அவர் சொல்வதைக் காங்கிரஸ் காரியக் கமிட்டி கேட்பதில்லை! அவர், 'நாம் பிரிட்டனுடன் ஒத்துழைக்க வேண்டும்' என்று கூறுவதைக் காங்கிரஸ்காரர்கள் கேட்டார்களா? அப்படிப்பட்ட காங்கிரஸார் இந்தியாவின் நன்மையை உத்தேசிக்கப் போகிறது," என்று 'டைம்ஸ்' பத்திரிகை பிதற்றியிருக்கிறது. காந்தியைப் பற்றியும், காங்கிரஸைப் பற்றியும், இந்தியாவைப் பற்றியும் இவ்வளவு தூரமாவது 'டைம்ஸ்' தெரிந்துகொண்டிருக்கிறதே என்று நினைக்க சந்தோஷம் தானகவே பீறிக்கொண்டு கிளம்புகிறது!

மற்றொரு விஷயம். நம் இந்தியர்களுக்கில்லாத கவலை 'டைம்ஸ்' பத்திரிகைக்கு வந்து விட்டது. சிறிய கக்ஷிகளிடம் தன் அனுதாபத்தை எழுத்து மூலம் காட்டுகிறது. காங்கிரஸ் கேட்பதைக் கொடுத்து விட்டால் சிறிய கக்ஷிகளுக்கு ஆபத்து வந்து விடுமே எனக் கண்ணீர் விடுகிறது. அதுவும் ஹிந்துக்கள் நிறைந்த நாட்டில் முஸ்லிம்களைத் தத்தளிக்க விடுவது மன்னர்பிரான் செங்கோலுக்கு ஒவ்வாது எனக் கூறுகிறது. இந்த யூகமும் தந்திரமும் இனிமேல் இந்தியாவில் நடைபெறாது என 'டைம்ஸு'க்குக் கூற விரும்புகிறோம். சிறுபான்மைக் கக்ஷி கஷ்டப்படுமே யென்றும், முஸ்லீம்கள் தத்தளிப்பார்களே யென்றும், திடீரென இந்தியாவுக்குச் சுயராஜ்ய ஜிலேபியைக் கொடுத்தால் அதை ஜீர்ணமாக்க இந்தியாவுக்குப் போதிய ஜீரண சக்தி இருக்கிறதா என்று சாக்குச் சொல்வதில் பிரயோஜனமில்லை. இந்தியர்களின் அன்பையும், உதவியையும் பிரிட்டன் பெற வேண்டுமென்றால் உடனே பூரண சுதந்திரத்தைக் கொடுத்தாக வேண்டும்.

பிரிட்டன் மற்றொரு நாட்டுடன் போர்க்கோலம் பூண்டு எழுந்திருக்கும் சமயத்தில் காங்கிரஸ் சுதந்திரம் கேட்பது அழகல்ல என்றும் காங்கிரஸின் கலகம் நாஸீஸத்திற்குப் பலத்தைக்கொடுக்கிறதென்றும் கூறுகிறது. அப்படி பிரிட்டன் நினைக்குமானால் இப்பொழுது இருக்கும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கும் நாஸீஸத்திற்கும் என்ன வித்தியாசம் இருக்கிறதென்று கேட்கிறோம். ரணகாயம் ஊமைக் காயத்தைவிட மேலே: இந்தியா ஜெர்மன் ஆதிக்கத்தில் இருந்திருக்குமானால் இந்நாள் இந்நாடு சுதந்திரநாடாயிருக்கும். இந்தியா கோழைநாடாக இருப்பதைவிட ரணகளமாக இருப்பதே மேல்.

மாஜி கனம் பன்னீர் செல்வத்தை நினைக்குந்தோறும் நம்மை யறியாமலே நமக்கும் சிரிப்பு வருகிறது. அவரும் ஜின்னாவும் சேர்ந்து பல்லவி பாடுவதைக் கேட்டதும் வயிறு புண்ணாகிறது. "காங்கிரஸ் சபை பிராமணரல்லாதவருடைய சங்கமல்ல"வென்று பன்னீர் செல்வமும் ஜின்னாவும் கூறுகிறார்கள். இவர்களிருவர்களுக்கும் பிராமணரல்லாதவர்கள்மீது ஏன் இவ்வளவு அக்கரை எனத் தெரியவில்லை. கிறிஸ்து மதத்தில் பிராமணர் பிராமணரல்லாதவர் என்னும் பாகுபாடு இருக்கிறதா? அல்லது மகமதிய மதத்தில்தான் இருக்கிறதா? பின் ஏன் இவர்கள் ஹிந்துக்களைப்பற்றிக் கூறவேண்டும். இதோர் பெரிய பைத்தியக்காரத்தனம் அல்லவா. அஞ்ஞானிகளை ஜானஸ்நானம் செய்விக்க யார் அஞ்ஞானிகள் யார் ஞானிகள் என்று தெரிந்துகொண்ட பிறகல்லவா பிரயத்தனப்படவேண்டும். ஞான ஸ்னானம செய்து கொண்ட ஞானியிடமிருந்து வரும் பிதற்றலா இது என்று நினைக்குந்தோறும் ஞான ஸ்நானத்திலுள்ள நம்பிக்கை போகிறதல்லவா? பிறமதத்தைப் பற்றிப் பேசவேண்டிய யோக்கியதை இவர்களிருவருக்கும் ஏதாவது கொஞ்சம் இருக்கிறதா? பின் ஏன் இவர்கள் பொற்பாத்திரத்தில் கையை விட்டு அமிர்தத்தை அசுத்தமாக்கவேண்டும்.

# சுருதி மண்டலத்தின் சௌடால் கச்சேரிகள்

(ஸ்ரீ. மஹாலிங்க சாஸ்திரிகளவர்கள் எம். ஏ. பி. எல்.)

## அங்கு டிக்கட்வாங்கி இங்கு சங்கீதம் கேட்டது.

ஜீர்ண சுருதி-என்ன ஐயா! ஏதோ டிக்கட் வாங்கினது ஒரு இடம் கச்சேரி கேட்டது வேறுஇடம் என்று சொன்னீர்களே என்ன விவரம்?

ஸர்வ சுருதி-அதுவா 'அன்று—கச்சேரிக்கு டிக்கட் வாங்கிக்கொண்டு போனோம் அல்லவா? நீர் வரவில்லை.

ஜீர்ண சுருதி—பணம் கொடுத்து கச்சேரி கேட்கவேண்டிய அவசியம் எனக்கில்லை. என்னைப்போலுள்ள அனுபோகஸ்தர்களை பணம் கொடுத்தல்லவா வரவழைத்து சபையில் உட்கார வைக்க வேண்டும். டிக்கட் என்னய்யா டிக்கட், யாருக்கு டிக்கட் வாங்குவது இந்த காலத்தில் தாரதரம் தெரியாமல் போய்விட்டது. டிக்கட் வாங்கி சோபாவில் உட்கார்ந்த மாத்திரத்தில் ஆகிவிட்டதோ. இந்த முண்டாசித் தலை நாலைந்தைக் கண்டதும் பாடகனுக்கு புரிந்து விடும் நன்றாய். தன்னானா பாட்டு பாடிவிட்டு காசை ஓசைப்படாமல் வாங்கிக்கொண்டு போய்விடலாமென்று. எங்கூட்டாளி முன்னாலுட்கார்ந்தால் ஏய்க்கமுடியுமா? இந்தக் காது என்ன சங்கீதம் கேட்டிருக்கு தெரியுமா? ஒரு மஹா வைத்தி என்ன, ஒரு சரபன் என்ன. ஒரு திருமருகல் நடேசனென்ன. ஒரு திருக்கோடிகாவல் கிருஷ்ணய்யர் என்ன. ஸங்கீதம் என்றால் எல்லாம் ஸங்கீதமாய் விடுமா? என்னய்யா இப்போ பாட்டு பாடறான். பல்லவி என்ற சொல்ல விந்து போய்விட்டது. தகனத்திற்கு தஹனமாய்விட்டது. ராகம் புஷ்பராகம்தான். பதினைந்து நிமிஷத்தில் சங்கராபரணம் எப்படியிருக்குன்னா—ஆத்தில் கழுத்து முட்டும் தண்ணி என்று சொன்னானாம். எதுடான்னா, தலைகீழ் நட்டுக்கொண்டால்—அது போல ராகம் வெள்ளம் மணல் பெரளுகிறது. இந்த அழகுக்கு டிக்கட் ரூ.5, 3, 2. 1. எனக்கேனையா டிக்கட் கொடுத்து கச்சேரி கேட்கணும், கேட்டுக் கேட்டுக் காது உளுத்துக்கிடக்கே!

ஸ—சுருதி—ஓய், ஜீர்ணசுருதி, உமக்குப்பேர் சரியாய்த்தானிருக்கிறது. நீர் இனி சங்கீதம் கேட்க லாயக்கில்லை. உளுத்துப்போன காதை வைத்துக் கொண்டு எப்படி ஸங்கிதம் கேட்பது? ஏனையா ரோம்ப பேசுகிறீர்? துட்டு செலவு செய்ய மனதில்லையே ஒழிய நீர் இனும் கச்சேரிஎன்றால் விடுகிறீரா? அன்னிக்கி சேந்தமங்கலம் சுப்பராமன் பாட்டைகேட்டு சொக்கிப்போனீரேங்காணும். என்ன உயர்ந்த ஸங்கிதம்—மஹா வைத்திநாதய்யரோ. தொண்டை தகரக்குவளை. தாளம்—பேதாளம் ஞானம்-திருமஞ்ஞானம். காம்போதி பாடினானே சஞ்சுருட்டிஸஞ்சாரத்தை கலந்து, திருக்கோடி காவல் கிருஷ்ணய்யர் கிட்ட கேட்ட காது அதை எப்படி சகிச்சுதோ எல்லாம் வேஷம். நானும் சங்கீதக்காரன்தான் ஐயா. நானும் கோனேரி ராஜபுரம் வைத்தியநாதய்யர் கூட இருந்தவன் அந்த காலத்து சங்கீதம் ஒரு மாதிரி இந்த காலத்துது ஒரு மாதிரி. வெறுமனே, சிச்சீ இந்தப் பழம் புளிக்கும் எங்கிற கதை பண்ணாதேயும். நிறுத்தும் உம்ம பூதஞ்சியை.

ஸர்வ சுருதி—நம் தாத்தாவுக்கு இந்த காலத்து ஸங்கிதம் கேட்டுத்தான் காது ஜீர்ணமாய்ப் போய்விட்டது.

ஜீர்ண சுருதி—பலே பலே. அதான் உண்மை இவன் கிடக்கான் ஸ—சுருதி எப்போதும் கோணல் கக்ஷி பேசுகிறவன். அதுவும் தாத்தான்னா தொக்கு எத்தை வேண்டுமானாலும் பேசட்

டுமே. எனக்கென்ன வந்துட்டுது. ஏதோ சிறு பிள்ளைகள் அப்படித்தான் பேசும். சரி, மேலே சமாசாரத்தை சொல்லு. அந்த டிக்கட்டு கச்சேரிக்கு போனே—ஏன் கச்சேரி நன்றாயில்லையோ.

ஸர்வ சுருதி— இல்லாமலென்ன.

ஜீர்ண சுருதி—அதானே கேட்டேன். நல்ல பாட்டுன்னு சொல்ரானே. நான் கேட்டதில்லே.

ஸுசுருதி—நாக்லே ஜலம் சொட்டரதோ, ஏதோ வைராக்யமாய் பேசினீரே நம் தியாகய்யர்வாளுத்ஸவத்திற்கு வந்து பாடச்சொல்ரேன். அப்ப சேளும் அதையும் கேட்டு விட்டு செத்துப் போம். அதற்குள் போய் விடாதேயும்.

ஜீர்ண சுருதி—எனக்கு ஆசைதான் என் பேரன் விச்சுவை இப்பத்தான் பள்ளிக்கூடத்தில் வைச்சிருக்கு. சாரீரம் மஹா வைத்யநாதய்யர் சாரீரம் மாதிரியிருக்கு எல்லாம் நீங்கள் மனசுவைத்தால் பிரமாதமான கீர்த்தியை சம்பாதித்து விடுவான். அவன் தந்திமேலே தந்தி வந்து கச்சேரி பண்ணி பார்த்து விட்டுத்தான் எனக்கு சாகணும் சுருதி யமதர்மராஜாவிடம் மனுப் போட்டுக்கொள்ளும் கிழத்துக்கு நல்ல ஆசை கொள்பேரன் தங்கக் கிண்ணிலே பாலும் சாதம் சாப்டுவதைப் பார்க்கணும்னு வரம் கேட்டாளும். ஒரு கோமுட்டி கிழவி அது மாதிரி இருக்கு உம்பபேரன் மஹா வைத்யநாதய்யராகப் போகணுமா.

ஜீர்ண சுருதி:— இவ்விடத்திலே மனசு வைத்தால்.

ஸுசுருதி:— எல்லாம் கழுதைகுட்டியிலே நன்றாயத்தானிருக்கும் பன்னிரண்டு வயது வரையில் எல்லாக் குழந்தைக்கும் குரல் கீச்சுன்னுதானிருக்கும் அப்புறம் சாயம் வெளுத்துப் போய்விடும் அவஸரப்படாதேயும் ஆகாசப் பந்தல் போடவேண்டாம்.

ஜீர்ண சுருதி:—அது கிடக்கட்டும் மேலே சொல்லுங்கள் எல்லாம் பிறக்கச்சே ஸ்வரஞானத்துடன் பிறக்கவில்லே. நீர் உங்க மாமனாரிடம் ஸங்கீதம் சொல்லிக்கொண்டதும் உமக்கு ரத்தம் வரும்படி குட்டுபட்டதும் தெரியுமய்யா தெரியும். யார் கிட்ட சாடு விடுகிறீர் எல்லாரும் படிப்படியாய்த்தான் ஏறியிருக்கிறான் திடீருனு ஆகாயத்திலிருந்து குதித்து விடவில்லே.

ஸுசுருதி.—அப்படி கஷ்டப்பட்ட சங்கீதம் தானேய்யா நிலேக்கு நிக்கும் ஏதோ ஒரு சிம்பிபொடி கேழ்க்கிறது போலே என் பேரனுக்கு இப்போதான் பல்முளைச்சிருக்குது உடனே மஹா வைத்யநாதய்யாராசப்பண்ணு இல்லாப்போனல் செத்துப் போய்விடுவேங்கிறீர்களே அதுக்குள சொல்றேன்.

ஜீர்ண சுருதி:—நான் அப்படியா சொன்னேன் ஏதப்பா உம்மோடே பேசுகிறதே ஆபத்தாயிருக்கு. உமக்கிஷ்டமில்லாப்போனா வேறே சங்கீதம் சொல்லிக்கொடுக்க ஆளா இல்லே.

ஸுசுருதி: —ஆளுக்கென்ன குறைச்சல் ஜோலாய் நல்ல அம்மா பேட்டை ஆளாய் பார்த்து பேரனே கொண்டு போய்விடும். ஸங்கீதம் வரும். ஸங்கீதம் தான் வரதோ வேறு என்னதான் வரதோ.

ஸர்வ சுருதி:— இருக்கட்டும். நாங்கள் கச்சேரிக்கு போனோமா—எப்படியும் சங்கீதமோல்லியோ. இடம் காலம் கேட்கிரவாள் அதிர்ஷ்டம் எல்லாத்தையும் பொறுத்துத்தான் கச்சேரி ரஸிக்கும் அன்னிக்கு பாருங்கோ இத்தனைக்கும் நல்ல கூட்டம் ஆனல் ஹால் ஒஹோன்று பெரிய ட்ராமா கொட்டாய் போல் இருக்கு பாடகருக்கோ ஸன்னசாரீரம் ஒரு பத்து ஐம்பது பேர் கூடிக் கேட்டால் நன்னாயிருக்கும் இதில் காசைக்கொடுத்து விட்டு உள்ளே வந்து பேசிக்கொண்டு உட்காந்திருக்கிறார்கள் 'வச வச'ன்னு சத்தம் ஸ்வாரஸ்யப்படல்லே. பார்த்தோம் ஒரு மணி ஒண்ணும் சுகப்படல்லே அப்போஸு ச்ருதிஅண்ண

என்னைப் பார்த்தார் தானசுருதியும் கானதருதியும் ஒத்தருக்கொத்தர் பார்த்துக்கொண்டார்கள். சரியாய் ஏழு மணிக்கு ரேடியோவில் ராமாநுஜய்யங்கார் பாட்டு முழுக்கச்சேரி எட்டேமுக்கால்வரை ரேடியோவில் அவ்வளவுதானே. ராஜமாணிக்கம் பிடில் மணி மிருதங்கம் பேஷான செட்டு ஸ்டேஷனே திருச்சினுப்பள்ளி நேரப்பாடராப்பலே கேழ்க்கும் யோசித்துப் பார்த்தோம். எல்லோரும் ஒரு மனஸாய் எழுந்திருந்து வந்துவிட்டோம். போனேம் சுப்பிரமணியய்யர் வீட்டுக்கு. வர வழிதானே

ஜீர்ண சுருதி—நல்ல காரியம் செய்தீர்கள். போறபோது என்னை ஒரு குரல் கூப்பிடப்படாதோ அதுக்கென்ன டிக்கட்டா மண்ணுங்கட்டியா. மஹாராஜன் ரேடியோ வைக்கிறுன். நான் வந்தா வாண்டாம்னு சொல்லப் போராள். உங்களுக்கு இந்தகிழத்தின் ஞாபகம் கிடையாது. நல்ல சங்கீதம் கேக்காமலே என் காது உளுத்துப் போரது. இப்பகேட்டா ராமானுஜய்யங்கார் பாட்டுத்தான் கேக்கணும். பிராசின வழியோடே கச்சிதமாய் பாடுகிறவர் அவர் ஒரு பேர்வழிதான் இருக்கார் போகட்டும் மேலே சொல்லுங்கோ. கச்சேரி நேரில் கேட்காவிட்டாலும் ஞானஸ்தாள் கேட்டிருக்கிறீர்களே, உங்களிடமிருந்தாவது அதன் ஸ்வாரஸ்யத்தை கொஞ்சம் அனுபவிக்கிறேன்.

---


## ஆயுத பூஜா மலர்

பாரதமணியின் ஆண்டு விழாவைக் கொண்டாடும் பொருட்டுத் தமிழர்களுக்கு ஓர் மலர் சமர்ப்பிக்கிறோம். இம் மலர் இலக்கியக் கட்டுரைகளும், வாழ்க்கைச் சித்திரங்களும், கண்ணைக் கவரும் சித்திரப் படங்களும்கூடி வெளிவரும். இதை அன்புடன் வரவேற்குமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.



விளம்பரம்

மன்னார்குடி டி. மு. கோர்ட்டு

1939வு S. C. No. 310

கிருஷ்ணஸாமிய்யங்கார்—வாதி

இப்போது ம. தா. சேரங்குளத்தி லிருந்து மதுரை ஜில்லா திருப்பறங் குன்றம் சன்னதி தெருவில், O. N. துரைஸாமிய்யங்கார் வீட்டிலிருந்து வரும் கிருஷ்ணஸாமிய்யங்கார்—பாரியை அலமேலு அம்மாள். } பிரதிவாதி

ஷை பிரதிவாதிக்கு இதனுல் அறிவிப்பதாவது :- ஷை செம்பரில் வாதியால் நோட்டுப்படி ரூ. 17-8-6க்கு உன் பேரில் தாவா செய்து, சம்மனை ஒட்டி சர்வு செய்ய ஆர்டராகி நாளது 23-10-39ல்—ஈரங்கி போடப்பட்டிருக்கிறது. அது விஷயமாய் ஆக்ஷேபனையிருந்தால் ஷை தேதியில் பகல் 10-மணிக்கு ஷை கோர்ட்டில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ளலாம்.

மன்னார்குடி, 11-10-39. } V.K, ராஜகோபாலய்யங்கார், வாதி வக்கீல்.

# ஸர்க்கஸ்

(திவான்பகதூர் கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரி.)

ஸர்க்கஸ் என்றால் தமிழில் தேகப் பயிற்சி அரங்கம் எனச் சொல்லலாம் என்று எனக்குத் தோன்றுகிறது. உலக வினோதங்களுக்குள் எனக்கு ஸர்க்கஸில் மிகவும் ப்ரியம். நாற்பத்திரண்டு அடி குறுக்களவுள்ள வட்ட ஸ்தலத்தைச் சுற்றிச் சிவப்புத் துணியை ஓரத்தில் தைத்துள்ள வெண்மையான துணி கட்டின உடனே அந்த இடம் மாயா வினோத மூலஸ்தானமாகிறது. சாதாரண குதிரைகள் எல்லாம் பஞ்ச கல்யாணிக் குதிரைகள் ஆகின்றன. சிங்கங்களும் புலிகளும் பூனைகளாகின்றன. பெரிய யானைகள்கூட ஸைகிள் வண்டி ஓட்டுகின்றன. குரங்குகள் மனிதர்களை விட நாகரீகமாக சிகரெட் பிடிக்கின்றன. விலங்குகள் நிலை இப்படி இருக்க மனிதர்கள் நிலை இன்னும் வினோதம். வானவில்லின் வர்ணங்கள் எல்லாம் மனிதர்கள் உடையில் குடிகொண்டிருக்கின்றன. பெண்கள் உடை வெகு விசித்திரம். ஆனால் எல்லா உடைகளைக் காட்டிலும் விகடகவி உடையே வெகு விசேஷம். அவனிடம் நீண்ட குல்லாயும் தளர்ந்து தொங்கும் உள் அங்கியும் மேல் அங்கியும் பல வர்ணங்களுடன் பிரகாசிக்கின்றன.

இந்தக்காலத்தில் ஸினிமாபைத்தியமே அதிகம். நாடக மேடையிலாவது உண்மையான மனிதர்களைக் காண்கிறோம். ஸினிமாவில் மனிதர்களுடைய உருவப் படக்காட்சி மட்டுந்தானே. பெருங் கூட்டமாக கட்டடத்துக்குள் கள்ளிருட்டில் உட்கார்ந்துகொண்டு வெகு வேகமாக ஓடும் புகைப்படங்களை அதிக வெளிச்சத்தில் கண் நோகப் பார்ப்பது உண்மையான ஆனந்தமா? ஸினிமா நடிகர்களுக்கு இக்காலத்தில் அனேகமாக யௌவனமும் அழகும் இருந்தால் போதும். இருட்டுள் நக்ஷத்திரங்கள் ஆகிவிடுகிறார்கள். ஸர்க்கஸ் அப்படியல்ல. தேகப் பயிற்சி நன்றாக ஏற்பட வேண்டும். நுட்பமான புத்தி வேண்டும். அவை இரண்டும் இருந்துகொண்டே இருக்கவேண்டும். ஒரே ஸினிமாவைப் பல ஊர்களில் ஒரே சமயத்தில் பார்க்கலாம். ரேடியோ அல்லது வானொலியில் ஓரிடத்தில் பேசினால் உலகம் முழுவதும் கேட்பார்கள். ஸர்க்கஸில் விளையாடுகிறவர்களை ஒரே சமயத்தில் இரண்டு இடங்களில் காணமுடியாது. ஒரே வேலையை செய்யப்பட்டவர்கள்கூட வெகு விதமான விசித்திர சாமர்த்தியத்துடன் இருக்கமுடியும். கட்டடங்களுக்குள் அடைக்கப்பட்டிராமல் நல்ல காற்றில் திறந்த வெளியில் வேடிக்கை பார்க்கலாம்.

ஏதோ தமாஷாகச் சொல்வதாக எண்ணக்கூடாது. நம்முடைய நாட்டில் தேகப் பயிற்சியும் தைர்யமும் மிகக் குறைவு. நாம் சுயராஜ்யம் வேணுமென்று விரும்புகிறோம். பலஹீனர்களுக்குச் சுயராஜ்யம் கிடைக்குமா? கிடைத்தால் தான் நிலைக்குமா? முடவன் கொம்புத்தேனை விரும்பினால் கிடைக்குமா? கிடைத்தாலும் அதைப் பிறர் அடித்துக்கொண்டு போகாமல் காப்பாற்ற முடியுமா? தேகப் பயிற்சி இல்லாவிட்டால் நாட்டின் சுதந்திரமோ நாகரீக பாதுகாப்போ ஏற்படாது. நம்முடைய கல்வித்துறைகளில் இந்த உணர்ச்சி ஓங்கி வளரவேண்டும். நாம் இருக்கும் நாடு நம்முடைய நாடு என்று உணர்ந்து அந்த உணர்ச்சியை நாடெங்கும் பரப்ப வேண்டும். அதே சர்வ க்ஷேமத்திற்கும் மூலஸ்தானம்.

# கவிச் செல்வம்

(ஏ. என். கல்யாண சுந்திரம் எம். ஏ.)

கவிகளின் செல்வம், வார்த்தைகளே. இவ்வார்த்தைகளைச் சேகரித்துக் கவிகள் தங்கள் புத்தியாகிற பொக்கிஷத்தில் பத்திரப்படுத்தி வைத்துக்கொள்ளுகிறார்கள். நம்மிடந்தான் செல்வம் நிறைய இருக்கிறதே என்று அதை அவர்கள் அதிகமாய் உபயோகப்படுத்துவதில்லை. இவ் விஷயத்தில் கவிகள் பெரும் கருமிகள். சாதுர்யம் என்ற சாவியினால் தங்கள் பொக்கிஷத்தைத் திறந்து உசிதமான பதங்களை எவ்வளவு குறைவாக உபயோகப்படுத்தலாமோ, அவ்வளவுதான் உபயோகப்படுத்துவார்கள். உபயோகப்படுத்திய பதங்களின் முழு மதிப்பையும் பெற்றுவிடுவார்கள். சங்கப் பலகையானது கவிகள் உட்கார உட்கார மேன் மேலும் வளருவதுபோல், இப்பதங்கள் கொண்டு எழுதப்பட்ட காவ்யத்தைப் படிக்க, புதிது புதிதாக அர்த்தங்கள் பல நமக்கு மேன்மேலும் தோன்றும். காமதேனுபோல் இவ்விதம் சக்திவாய்ந்த பதங்களே கவிச் செல்வம்.

அடுத்த வீட்டு அண்ணுசாமியும், அவர் மனைவி அம்புஜமும் சண்டை போட்டுக்கொண்டால், அதைச் சாதாரணமாக நம்போன்றவர்கள் எழுதினால், "அம்புஜமும் அண்ணுசாமியும் சண்டை போட்டுக்கொண்டார்கள்" என்று எழுதி விடுவோம். இதைப் படிப்பவர்களுக்கு அதிலிருந்து அண்ணுசாமி, அம்புஜம் என்ற இருவர் சண்டை போட்டுக் கொண்டார்கள் என்பதுதான் தெரியும். அவர்கள் ஏன் சண்டைபோட்டுக் கொண்டார்கள். காரணம் என்ன! அவர்கள் எப்படிப்பட்டவர்கள், அவர்கள் குணம் முதலியவைகள் என்ன என்கிற விஷயங்கள் அவர்களுக்குப் புலப்படாது. இவைகளை எழுதினால் அது ஒரு புராணமாகிவிடும். ஆனால் இதைப்பற்றி ஓர் கவி எழுதினால், அவர் தன் திறமையைக் காட்டி, ரஸம் கெடாமல், சுருக்கமாக எழுதி, அழகுடன் எல்லா விஷயங்களும் புரியும்படி எழுதுவார்.

ஒரு நாயகி தன் நாயகன் மேல் கோபங் கொண்டு பேசாமல் இருந்தாள். அக் கோபத்தைத் தணிக்க, நாயகன் அவளைச் சமாதானம் செய்யத் தொடங்கினான். அதை ஒரு ஸம்ஸ்கிருத கவி அழகாய் எழுதியிருக்கிறார். அதைக் கீழே எழுதி அதன் அர்த்தத்தையும், கவி மிக்க சாதுர்யமாகப் பதங்களை உபயோகித் திருப்பதையும் விளக்கி எழுதி யிருக்கிறேன். அதிலிருந்து நமக்குக் கவியின் திறமையும், பெருமையும் நன்கு விளங்கும்.

பாலே! நாதா! விமுஞ்ச மானினி ருஷம்,
ரோஷன் மயா கிம் க்ருதம், கேதோஅஸ்மா
ந மே அபராத்யதி பவான், ஸர்வே
[அபராதாம்,
தத் கிம் ரோதிஷி கத்ததேன வசஸா,
கஸ்யாத்ரதோ ருத்யதே, நன்வேதன்மம,
காதவாஸ்மி, தயிதா, நாஸ்மீத்யதோருத்யதே.

'பாலே' (பெண்ணே) என்று நாயகன் சமாதானத்துடன் கூப்பிட்டான். நாயகிகளை, பாலை, முத்தை முதலிய அநேக பிரிவுகளாகப் பிரித்திருக்கிறார்கள். அப்படியிருக்க, வேறு விதமாகக் கூப்பிடாமல், 'பாலே' என்று ஏன் நாயகன் கூப்பிட்டான்? 'பாலே' என்றால் உலகமறியாச் சிறுபெண் என்று அர்த்தமாகிறது. "காரணமின்றி, சிறுபெண்போல் என்மேல் கோபம் கொண்டிருக்கின்றாய். உன்னைச் சிறுபெண், ஒன்றுமறியாதவள் என்றெண்ணியே உன்னுடன் சமாதானமாகப் பேசவந்திருக்கிறேன்," என்று தோன்றவே, 'பாலே' என்று நாயகன் கூப்பிட்டான். இதற்கு நாயகியானவள் 'நாதா' (கணவா) என்று பதில் அளித்தாள். சாதாரணமாகக் கோபங்கொண்ட பெண்மணி, தன் கணவன் அழைக்கும்போது பதில் அளிக்க மாட்டாள். ஒருவேளை திரும்பி கண

வனைக் கோபத்துடனே அல்லது வருத்தத்துடனே பார்ப்பாள். அப்படியே அவன் பதில் சொல்லித்தான் ஆகவேண்டுமென்றால், 'ஏன்' என்றோ அல்லது வேறு ஏதேனும் சொல்லியிருக்கக் கூடாதா? கணவா' என்று பதிலளிப்பானேன் என்றால், கவி, இவ்வார்த்தையை உபயோகித்துத் தன் சாதுர்யத்தைக் காட்டியிருக்கிறார். நாதா! தன்னையறியாச் சிறு பெண் என்று என்னை எண்ணி, 'பாலே' என்று கூப்பிட்டீர்கள். ஆனால் நான் அவ்விதம் இல்லை. நான் நன்கு உலகமறிந்திருக்கிறேன். நாதன் என்றால் என்ன, நாதனால் உண்டாகும் ஸுகதுக்கங்கள் என்ன, நாதன் என்பதின் உண்மை அர்த்தம் என்பதை நான் நன்குணர்வேன்" என்பதைத் தோற்றுவிக்கவே, 'நாதா' என்ற பதத்தைக் கவி உபயோகித்தார்.

விமுஞ்ச மானினிருஷம் (கோபத்தை விடு மானினி) என்று நாயகன் வேண்டிக் கொள்கிறான். அவன் கோபம் எப்படிப் பட்டது என்பதை விளக்கவே, மானினி என்றார் கவி. மானினி என்றால், சிறு அவமதிப்பையும் சிறிதும் பொறுக்காதவள் என்றும், அந்நிய ஸ்திரீயிடம் நாயகனது மனம் சென்றுவிட்டதோ என்ற ஸந்தேகத்தால், பொறுமைகொண்டு கோபம் கொண்டவள் என்றும் அர்த்தம் உண்டு. இவ்விரண்டும் விளங்கும்படி 'மானினி' என்று நாயகன் கூப்பிட்டான். "என்மேல் சந்தேகங்கொண்டு நீ கோபங் கொண்டிருக்கிறாய். அதுவும் தவிர, உன்னை 'பாலே' என்று நான் அழைத்து அவமதித்துவிட்டதாய் எண்ணியும் கோபங்கொண்டிருக்கிறாய். நான் அவ்விதம் ஒன்றும் செய்துவிடவில்லை. ஆகையால் நீ இக்காரணங்களால் கொண்டிருக்கும் கோபத்தை விட்டுவிடு" என்று நாயகன் வேண்டிக்கொள்கிறான்.

ஆனால் நாயகியோ இதையறிந்து "ரோஷான்மயா கிம்க்ருதம்" (கோபத்தினால் நான் செய்தது என்ன) என்று கேட்கிறாள். "நான் கோபங்கொண்டது தவறு என்பதுபோல், கோபத்தை விடு என்கிறீர்கள். இந்தச் சிறு பெண்ணின் கோபம் தங்களை என்ன செய்துவிடும். என் கோபத்திற்கு நீங்கள் மதிப்பு வேறு கொடுக்கப்போகிறீர்களா' என்ற பொருள் இக்கேள்வியிலிருந்து தோன்றுகிறது.

'கேதோ அஸ்மாஸு' (எனக்கு துக்கத்தைச் செய்தாய்) என்று நாயகன பதில் அளித்து. "இவ்வருத்தம் எனக்கு மாத்திரம் இல்லை. உனக்குந்தான். என்னிடம் நீ வருத்தப்பட்டு, எனக்கும் கஷ்டத்தை உண்டுபண்ணி, நீயும் கஷ்டப் படும்படி செய்கிறது உன் கோபம்' என்று த்வனிக்கும்படி 'அஸ்மாஸு' என்ற பதத்தில் பன்மையை உபயோகித்திருக்கிறார் கவி.

"ஆமாம் நீங்கள் செய்கிறதெல்லாம் சரியே. நான் தான் குற்றம் செய்தேன்' நான் செய்கிறது உங்களுக்குக் குற்றமாகத்தான் தோன்றும். ஆனால் உங்கள் குற்றம் உங்களுக்கு என்னமாகத் தோன்றப் போகிறது? நீங்கள் இழைத்த பிழையினால் என்மனம் துன்புற வில்லையென்று நினைக்கிறீர்கள். அது தவறு" என்று சுட்டிக்காட்டி, "நமே அபராத்யதி பவான்" (தாங்கள் எனக்கு இன்னல் இழைக்கவில்லை) "ஸர்வே, அபராதம் மயி" (எல்லாப் பிழைகளும் என்னிடந் தான் இருக்கின்றன.) என்று பதில் கூறுகிறாள் நாயகி.

"பிழைகள் இழைத்தது நீ என்றால், அப்பிழைகளினால் உண்டான கஷ்டத்தால் அழவேண்டியவன் நானல்லவா. அப்படியிருக்க, நீ இவ்விதம் அழுவது அழகா? அல்லது பிழைகள் இழைத்து என்னை இன்னல் உறச் செய்ததற்காக அழுகிறாயா" என்று கேட்பதுபோல் "தத்கிம் ரோதிஷி சுத்ததேன வசஸா" (அப்பொழுது இந்த தழுதழுத்த வார்த்தைகளுடன் இந்த அழுகை ஏன்) என்று நாயகன் கேட்கிறான்.

"நான் அழுவது தவறா? உங்கள் செய்கைகளினால்தானே நான் அழும்படி நேரிட்டது? எனக்கு உங்களை விட்டால் வேறு கதி ஏது? என் குறைகளைத் தீர்க்க, நான் உங்களிடந்தானே அழவேண்டும். மற்றவர்களிடம் சொல்லிப் பயன்

என்ன" என்ற நோக்கத்தை "கஸ்யாக் ரதோ ருத்யதே" (எவர் முன்னிலையில் நான் அழுகிறேன்) என்ற பதங்களால் நாயகி வெளிப்படுத்துகிறாள்.


"நனு ஏதன்மம" (என் முன்னிலையில் அல்லவா இந்த அழுகை என்று நாயகன் கூறுகிறான். "நான் உன் நாதன் இருக்க—நீ என் முன்னிலையில் அழலாமா? நான் உன் நாதன் அல்லவா? நாதன் முன் அழுவது எவ்விதம் நியாயமாகும்" என்று நாதன் கேட்கிறான்.

"ஆமாம். நீங்கள் என் நாதன்தான். நானும் உங்களை அவ்விதமே மதித்திருக்கிறேன். ஆனால் நீங்கள் என்னைத் தங்கள் காதலியாக—எண்ணவில்லை. மற்றொருத்தியின் மேல் மயக்கங்கொண்டு, நான் தங்கள் காதலி என்பதைக்கூட மறந்து விட்டீர்கள்," என்னும் பொருள்பட, "சாதவாஸ்மி" (நான் தங்களுக்கு யார்) என்று நாயகி கேட்கிறாள்.

"தயிதா" (காதலி) என மறுமொழியளிக்கிறான் நாயகன். "எனக்கும் உனக்குமுள்ள சொந்தத்தை நான் மறுக்கவில்லை. மற்றொருத்தியிடம் நான் அன்பும் கொள்ளவில்லை. உன் அன்பால் நீ என்னை ஜயித்து, என் உள்ளத்தில் குடிகொண்டிருக்கும் காதலி நீயே" என்றுரைக்கிறான் நாதன்.

"நாஸ்மீத்ய தோருத்யதே" (அவ்விதம் நான் இல்லை என்றே அழுகிறேன்) என்று முடிக்கிறாள் நாயகி. "தங்கள் அன்பைப் பெற்றுத் தங்கள் உள்ளத்தில் குடிகொண்டிருக்கும் நாயகி நான் என்றால், தாங்கள் வேறு எந்தப் பெண்ணையும் கண்ணால்கூடப் பார்க்க மாட்டீர்கள். எனக்கு ஸந்தேஹத்தை உண்டுபண்ணி, என் மனதை நோகச் செய்து என்னை அழச் செய்யமாட்டீர்கள். ஆகையால் நான் இவ்விதம் அழுவதிலிருந்து, என்னைத் தாங்கள் தங்கள் காதலியாக எண்ணவில்லை," என்று நாயகி முடிக்கிறாள்.

இவையனைத்தையும் உசிதமான பதங்களை உபயோகப்படுத்தி மிகவும் அழகாக ஆறு வரியில் கவி எழுதிவிட்டார். இதுதான் காவ்யம். இதுவே கவியின் பெருமை. இதுவே கவிச் செல்வம்.



# தக்ஷிண திலகம்

(வரகவி. திரு. அ. சுப்ரமணிய பாரதி)

(முன் தொடர்ச்சி)

உலகத்தில் ஒரு பெரிய ஸ்தாபனத்தை நிருமிப்பதற்குப் பெரியார் எவரையேனும் துணையாகக்கொண்டு அவர் மூலமாக அதை ஆரம்பம் செய்வது வழக்கம். பெரியார் என்பவர் வயதில் மூத்தவர் என்பது மாத்திரமல்ல; கல்வியிலும் கேள்வியிலும் அநுபவத்திலும் குணத்திலும் முதிர்ந்தவராயிருப்பதுடன், சுயநல உழைப்பிலும் பிறர் நல உழைப்பிலும் கொள்ளும் சிரத்தையை விடப் பொதுநல உழைப்பில் ஈடுபட்டவராயிருப்பவரே யாவர்.

பொது நலப் பான்மை யில்லாதவர்—ஓங்கிவளர்ந்து உதித்த ஓதியமரத்துக்கும், பொதுநலப் பான்மை தாங்கியவர் விழுதுகள் பல தாங்கி விசாலமாக வளர்ந்த ஓர் ஆலமரத்துக்கும் ஒப்பாவார் என்று கற்பனை படிக்கும் விற்பனருள்ளம்.

இத்தகையார், ஆரம்பம் செய்யும் எந்தக்காரியமும் மழைக்காலத்துச் சுக்ல பக்ஷத்தில் நடப்பட்ட விதை எப்படி வேர் தாங்கி முளைத்து இடையூறின்றிச் செழிப்பாய் வளர்ந்து பயனளிக்குமோ அப்படிப் பயனளிக்குமென்பதில் ஐயமில்லை. நடப்பட்ட விதை தானழிந்த அளவில் விகசிதமடைந்து பலர் பயன் பெற விளங்குகிறது. இதுபோல் த்யாக புத்தியால் தற்போதங்கடந்த பெரியாரும் விகசிதமடைவர் உலகம், நலம்பல அடைய. இதனை நாம் நிதர்சனமாகக் காட்டினாலல்லவா நவீன நாகரிக உலகம் ஒப்புக்கொள்ளும்? கவனிப்போம்.

நம்மவரில் நவீன நாகரிகர் சிலர் நம் முன்னோர் செயலையும் சாஸ்திரங்களையும் மனநலம், நாநலம், குலநலம், குணநலம், தேசநலம் இவையெல்லாங் கெடப் பழித்து மகிழ்வதைக் காண்கிறோம். அவ்வப்போதைய கால நிலைக்கேற்றவளவில் நாகரிகமும் நாகரிகத்துக்கேற்றபடி பழக்க வழக்கங்களும் உலகத்திற் பரவும் என்கிற நினைவை முன்கொண்டு விவகாரத்தில் இறங்குவது தான் சிறப்பாகும். அல்லாமலும் நம்முன்னோர் கௌரவங் குறையக் குறை கூறிப் பெருமையடையப் பார்ப்பதிலும் அவர்களுடைய பெருஞ்செயல்களை எடுத்துப் பேசிக் கௌரவமடைவது—

“பிறராற் பெருஞ்சுட்டு வேண்டுவான் யாண்டும்
மறவாமே நோற்ப தொன்றுண்டு—பிறர்பிறர்
சீரெல்லாந் தூக்கிச் சிறுமை புறங்காத்து
யார் யார்க்குந் தாழ்ச்சி சொலல்—”

என்ற போதனையைக் கடைப்பிடித்ததாகுமன்றோ? அன்றியுங் குறை கூறுவது தன் தலையில் தானே மண்ணை வாரிப் போட்டுக்கொள்ளும் யானையின் அருவருக்கத்தக்க செயலை நிகர்க்கும்.

யானையிடம் பல அபூர்வ குணங்களுண்டு. நீண்ட நாட்கள் வரையில் எதையுந் தன் நினைவில் வைத்திருக்கும் சக்தி யானைக்குண்டு. உடல் வலியும் கம்பீரமும் விளங்கத் தன் இனங் காத்துக் கொள்ளும் தகைமையுமுடையது யானை. தனக்குத் துன்பம் செய்தவரைச் சமயம் வாய்ந்தபோது......பழி தீர்த்துக்கொள்ளும் பண்புமுண்டதற்கு. ஆனால் திருஷ்டி பரிகாரார்த்தமோ என்று கருதும்படி அதனிடம், சந்திரனிற் களங்கம்போல், தன் இனத்தைப் படுகுழியில் வீழ்த்தத் தன் எஜமானனுக்குத் துணை செய்யும் இழிவான குணமும் விளங்குகிறது. இந்த குணத்தை மேற்கொண்டவர் நம்மை முதன் முதலில் நம் தேசத்துக்கு வர்த்தகம் செய்ய வந்த மேல் நாட்டாருக்

குக் காட்டிக் கொடுத்துச் சுயநலந் தேடி மகிழ்ந்தனர்.

கடந்த 150 வருஷங்களுக்கு முன் பிரான் ஸிலாபுஸி என்னும் பிரெஞ்சு ராஜதந்திரி புதுச்சேரியிலிருந்து கோலகொண்டா நவாப்பைப் பார்க்கச் சென்றிருந்து திரும்பினான். அவனிடம் சுதேச பாஷையும் பிரஞ்சு பாஷையும் தெரிந்த லட்சுமணய்யா என்ற துபாஷ் இருந்தான். அவனோடு புஸி என்பவன் விஜயநகர ராஜ்யம் வந்தான். அப்போது விஜயநகர ராஜாவுக்கும் பொப்பிலி ராஜாவுக்கும் பகை மேலிட்டிருந்தது. இந்த உளவறிந்த லட்சுமணய்யா என்பவன், முதலில் புஸியை இவர்களுக்கிடையில் கொண்டுவந்து விட்டு அப்பால் இவர்களைப் பலவகையான சூழ்ச்சிகளுக் காளாக்கிப் பகை மிகும்படி செய்து விஜயநகரராஜா புஸியின் துணையை நாடும்படி நாடகம் நடத்தி விட்டான். புஸி வெடி மருந்தின் துணைகொண்டு பொப்பிலி ராஜாவையும் நகரத்தையும் பாழாக்கித் தன் துணைநாடிய விஜயநகர ராஜாவுக்கு வெற்றியுண்டாக்கிப் பெரும் பொருள் கொண்டு சென்றான்—லட்சுமணையாவும் க்ஷேமமடைந்தான் — என்று படித்த சரித்திர வரலாறென்று இச் சமயம் ஞாபகத்துக்கு வருகிறது. அக்காலத்தில் நடமாடிய இந்த இழிகுணம் நாகரிக மிகுந்ததென்று பேசிக்கொள்ளும் இக்காலத்திலும் நம்மவரிடம் காணப்படுகிறது. இது, "வெல்லத்தை மலை போலக்குவித்து அதன் நடுவில் வேப்பம் விதையை நட்டுப் பால்விட்டு வளர்த்தாலும் அதன் கசப்புப் போகாதென்ற வாறு"—என்ற நீதி சாஸ்திரம் பாடி இடித்துக்கூற இடமுண்டாக்குகிறது! ஆகையினால் இந்த இழி குணத்தையும் நம் முன்னோர்க்கு அகௌரவமுண்டாக்கிப் பெருமையடையப் பார்க்கும் அற்ப குணத்தையும் அறவே மறந்து யானையின் ஏனைய குணங்களில் ஈடுபட முன்வர வேண்டுமென்கிற பிரார்த்தனையுடன் தக்ஷிண திலக புராண காலக்ஷேபத்தைக் கவனிப்போம்.

சகோதரர்களே!

நம் தக்ஷிண திலகம் விதைத்த விதையல்லவா நாம் இப்போது சிரோபூஷணமாகக் கொள்ளத்தக்க சிந்தாமணியென விளங்கும் ஹிந்து" என்னும் பத்திரிகை! நமது தேசாபிமான சிங்கத்தின் ஆதி கர்ஜனையல்லவா, கண்ணன் கரத்துப்பாஞ்சஜன்ய முழக்கம்போல், இப்போது உலகமெங்கும் துயில்நீங்கிச் சுறுசுறுப்படையும்படி முழங்கும் "ஹிந்து"! பொதுநல ஞானபாநுவாக விளங்கிய நமது ஐயரின் அரிய முயற்சியல்லவா பூலோக கற்பக விருக்ஷம்போல் இப்போது நம்மவரேயன்றிப் பிறதேசத்தவர்க்கும் ஆதரவளிக்கும் "ஹிந்து"! வீரத்யாகம் என்கிற கவசம்பூண்டு ஜனசாரச் சீர்திருத்தப் போராட்டத்தில் ஈடுபட்ட உத்தமகுண சீலரின் ஸமரஸஞானப் பிரகாசமல்லவா இப்போது உலகெங்கும் பிரகாசிக்கும் "ஹிந்து"! ஆகா! இத்தகைய அபூர்வ விளக்கைப் பாரததேசமென்கிற குடும்பம் விளங்க ஏற்றிவைத்த தக்ஷிண திலகம் இப்போது தேவர்தம் குழுவில் தேவர்தம் திலகம் என்ற பெயருடன் விளங்குமென்பதை மெய்ஞ்ஞானஉணர்வு கைவந்த விவேகிகள் உணராமலிருப்பரோ! அவரை நினைப்பவர்க்கும் அவரை ஆராதிப்பவர்க்கும் அவருடைய தெய்விக ஆசீர்வாதம் இல்லாமற் போகுமா?—இந்த ஆசீர்வாதம் பெற அறிஞர் பாடுபடாமலிருப்பரோ?

அன்பர்களே!

பாரத பூமியில் தமது தந்தையின் நலங்கருதி, "நான் என் ஆயுள் நாள் முழுவதும் பிர்ம்மச்சரியமே அநுஷ்டிப்பேன்! ராஜ்யாபிஷேகமும் ஏற்றுக்கொள்ளேன்." என்று பயங்கரமான பிரதிக்ஞை செய்து பீஷ்மர் என்கிற பெயரடைந்தார் ஒரு க்ஷத்திரிய வீரர்! அந்த மஹான், ஒருவராலும் வெல்லமுடியாத ஆண்மையையும் நிகரற்ற நீதிப் புலமையையும் தாம் எப்போது விரும்புவரோ அப்போது மரணமடையும்படியான வரப்ரஸாதத்தையும் கபடநாடக சூத்ரதாரியாக விளங்கிய கண்ணபிரா

னும் கண்யப்படுத்தத் தக்க மெய்ஞ்ஞா உணர்வையும் திரிகால ப்ரக்ஞையையும் பெற்றிருந்தார். அவர் உத்தமகதியிற் சேர்க்கும் காலமாகிய உத்தராயணத்தில் ரதஸப்தமி யன்று மரணத்தை விரும்பி அதன்படி யடைந்தார்.

அந்த மஹானுக்காக இப்போதும் ரதஸப்தமி யன்று தர்ப்பணம் செய்து வருகிற வழக்கமிருந்து வருகிறது. தர்ப்பணம் என்றால் வேதரிக் சொல்லி எள்ளுந் தண்ணீர் விடுவதன்மூலம் காலஞ் சென்றவர்களை நினைத்துப் பிதிர்த்தேவர்களை ஆராதித்துத் திருப்தி செய்வித்தலேயாம். இதனை நன்றியறிதலின் சார்பில் வைத்துப் போற்றுவது பொருந்தும். ஆகையினாலேதான் வைதிகர் தம் தம் பிதிர்க்களுக்குத் தர்ப்பணம் செய்வதோடிராமல்—அரிய பெரிய நன்றி செய்த ரிஷிகளுக்கும் ரிஷி பத்னிகளுக்கும் ஹிதிகாச புராணங்களுக்கும் கற்பத்துக்கும் பிரஹ்மயக்ஞத்தின் மூலம் தர்ப்பணம் செய்து வருகிறார்கள். இவ்வாறு தர்ப்பணம் செய்பவர்கள் பிதிர்த்தேவதைகளின் மூலம் அந்தந்தப் பெரியாரின் ஆசீர்வாதம் பெறுகிறார்கள் என்பது சாஸ்திரத் துணிபு. இந்தக் கருத்துக்கொண்டே அநேகர்—திலகர் பெருமானுக்கும் அவரை இவருடைய ஆராதனை நாளில் நினைத்துத் தர்ப்பணம் செய்யலாயினர். கோபால கிருஷ்ண கோகலே அவர்களின் சிராத்ததினம் பூனாவிலும் மற்றும் அநேக இடங்களிலும் கொண்டாடப்படுவதுண்டு. இப்போதும் இதைத் தேசநலங் கருதிப் பாடுபடும் பெரியார் அநுஷ்டித்து வருவார்களென்று நம்புகிறோம். காலஞ் சென்ற—தேச பக்தசிரோமணியாகிய— வா. வே. சுப்ரமண்ய ஐயர், இச் சென்னைமா நகரிலிருந்து தேசபக்தன் என்ற பத்திரிகையை நடத்திவந்த காலத்தில்—எமக்கும் அவர்க்கும் நடைபெற்றபல சம்பாஷணைகளில் ஒன்று—திலகர் தர்ப்பணம் என்பதாகும். அவர்கள் திலகருக்குத் தர்ப்பணம் செய்துவந்ததுமன்றி என்னையும் அந்த உயரிய கிரியையில் ஈடுபடுத்தினர். இப்போது நாம் திலகருக்கே யன்றி, தக்ஷிண திலகத்துக்கும், வீர ஸ்வர்க்கவேந்தராகிய ஐயர் அவர்களுக்கும் தர்ப்பணம் செய்துவரும் ஆசாரணையை மேற்கொண்டிருக்கிறோம்.

சகோதரர்களே:

இச்சமயம் உங்களுக்கு உலக ஞானத்தையும் அரசியல் ஞானத்தையும் ஜனசாரச் சீர்திருத்த ஊக்கத்தையும் காட்டிக்கொடுத்த, தக்ஷிண திலகத்தினுடைய பரிபூர்ண ஆசீர்வாதத்தைப் பெற நீங்கள் சிரத்தை கொள்ளவேண்டியதவச்யம் என்று தூண்டாமலிருக்க முடியவில்லை. ஆதலால் நீங்கள் அவரை நினைத்துத் தர்ப்பணம் செய்யாவிட்டாலும்—(ஏன் செய்யாவிட்டாலும் என்ற பாட்டென்றால்—தாய் தந்தையர்க்குத் தர்ப்பணம் செய்வதே இழுப்பிலிருக்கிற படியினால்) அவருடைய ஜன்ம தினத்தைப் பாராட்டிக் கொண்டாடியாவது அவருடைய ஆசீர்வாதம்பெறப் பாடுபடவேண்டாமா? கோயில் கட்டித் தெய்வங்களைப் பிரதிஷ்டை செய்து ஆராதிப்பது போல் ஆராதிக்க வேண்டாமா? சென்னை மஹாஜனசபையின் சுவரில் ஓர் மூலையில் ஐயர் அவர்களுடைய படத்தைத் தொங்க விட்டிருப்பது கொண்டு கடமையைச் செய்து விட்டதாகத் திருப்தியடைவது போதுமா? நாமடையுமின்பம் உலகமும் அடையவேண்டுமென்று பாடுபடுவதல்லவா பெரியார் சமூகத்திற் சேர்க்கும் பெருமையைக் கொடுக்கும்?

இச்சமயம் ஒரு விஷயம் ஞாபகத்துக்கு வருகிறது. கடந்த பதினைந்து வருஷத்துக்கு முன் திருவல்லிக்கேணியில் பெரிய தெருவில்—ஐயர் அவர்கள் பேரால் ஒரு வாசகசாலை ஸ்தாபிதமாயிற்று. அது இப்போது இருக்குமிடந் தெரிய வில்லை. ஆகா இது ஒரு செய்கையா? 'செய்வன திருந்தச் செய்'' என்கிற உபதேசம் பெற்றவர்களின் வம்சத்திற் பிறந்த மக்களாயிருந்தும் இவ்வாறு நடப்பதழகாகுமா?

இப்போது சமீபத்தில் ஐயர் அவர்களின் திருவுருவப் படத்தைச் சென்னை கார்ப்பொரேஷன் கட்டிடத்தில் ஒரு

மூலையில் தொங்கவிட்டு—கௌன்ஸிலர்கள் கும்மியடிக்கப் போவதாகக் கேள்வி! இவ்வாறு இந்நகரில்—கும்மியடித்து விட்டால்—சாதாரண அறிவுடைய தமிழ் வியாபாரிகளும், விவசாயிகளும் தேசாபிமானமும்—பாஷாபிமானமும் அரசியல் ஞானமும் பெற அரும் பாடுபட்ட ஐயரவர்களுக்குச் சரியான ஆராதனை செய்த தாகுமா?

ஐயர் அவர்களின் — திருவுருவப்படமும்—சரித்திரமும்—நகரப் பள்ளிக்கூடங்களிலல்லாமல்கிராமப்பள்ளிக்கூடங்களிலும் தெய்வ பிம்பத்தையும் அதன் ஸ்தோத்ர புத்தகத்தையும் போல் விளங்கவைக்கப் பாடுபட வேண்டாமா?—கிராம வாசிகளுடைய உழைப்பில்—அடையப்படும் பயனை—அல்வாவாகவும் ஜிலேபியாகவும் இன்னும் என்னென்னவோவாகவும்—காபி,கொக்கோ,டீ, ஓவல்டின், முதலியனவாகவும் ஆங்கிலேயர் நம்தேச சரக்கைக் கொண்டு—விதவிதமான டானிக் செய்வது போல்—காபி ஹோட்டல்களின் மூலம் செய்வித்து—அகவிலை தெரியாதவனைப்போல் உண்டு மகிழும்—நகர வாசிகள் கிராம வாசிகளின் பொருட்டு இந்த நன்றியையாவது செய்ய முன்வர வேண்டும்—முன் வராமற் போனால் நன்றி கொன்ற பாவம் சூழாதா?—கவனிக்கவேண்டும்! கடமை கடைப்பிடித்தல் வேண்டும்! இனியதாம் இது செய்வதில் மூளையும் ஆற்றலும் அறிவும் பயன்பட உலகத்தோடு ஒற்றுமை பாராட்டிக் கட்டிப் புரளவேண்டும்!

ஆகா ஒரு விஷயம்! இன்று புதுச்சேரிக்குச் சென்று அங்கே தேசிய கவி பாரதியைப்பற்றிப் பிரஸ்தாபித்தாலும் அன்று அவருடன் பழகிய அவ்வூரார்—பாரதியின் தேகத்திற் படிந்த தேசீயப் புழுதி படிந்த இடமிது என்று கூறி மகிழ்வதைக் காணலாம் இதுவல்லவா தேசாபிமானம். ?—

(தொடரும்)


# அறிக்கை

அக்டோபர்மீ முதல் தேதியுடன் எந்த சந்தாதாரர்களின் சந்தா முடிவு பெறுகிறதோ அவர்கள் தங்களுடைய புது வருஷ சந்தாவான ரூ. 4 ஐயும் மணியார்டர் மூலமாகக் கூடிய சீக்கிரத்தில் அனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். அக்டோபர் மாத முடிவிற்குள் அவர்களுடைய சந்தா எங்களுக்கு வந்து சேராவிட்டால், நவம்பர் மாதத்தில் வரும் முதல் வெளியீட்டை அவர்களுக்கு வி. பி. மூலமாக அனுப்ப நேரிடும். அதை அவர்கள் தயவுசெய்து பெற்றுக்கொள்ள வேண்டுகிறோம்.

**மானேஜர்,**

"பாரதமணி" காரியாலயம்,

7, வடக்கு மாடவீதி, மயிலாப்பூர், சென்னை.

# 'அவர் தவறவே இல்லை!'

(வே. ரா. சுந்தரராமன், எம். ஏ.)

சமீபத்தில் நம் தமிழ்மொழிக்கே தாய் போல் விளங்கும் மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் அவர்களைக்கண்டு சிறிதுநேரம் அவருடன் அளவளாவும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. அவருடைய தரிசனத்தினாலும் சம்பாஷணையினாலும் நான் அடைந்த மகிழ்ச்சி அளவில் அடங்காது. இவ்வானந்தத்தைப் பிறருடன் பகிர்ந்து கொள்ளவேண்டுமென்பதுதான் இக் கட்டுரையின் கருத்து.

அய்யர் அவர்களிடம் பாடம் படிக்கும் பாக்கியத்தை நான் அடையவில்லை. சென்னை ராஜதானிக் கல்லூரியில் நான் மாணவனாய்ச் சேரு முன்னமேயே அய்யரவர்கள் உபகாரச் சம்பளம் பெற்று வேலையைவிட்டு விலகிவிட்டனர். ஆனால் அப்பொழுதே—அதாவது சுமார் பதினைந்து வருஷங்களுக்கு முன்னரே அவருடைய மாணவர்களிடமிருந்து ஐயர் அவர்களைப்பற்றி—முக்கியமாய் வகுப்பில் பிள்ளைகளுக்கு அலுப்பு சலிப்புத்தோன்றாதவண்ணம் பாடம் சொல்லிக்கொடுப்பதைப்பற்றியும் நடுநடுவே ஹாஸ்யக் கூற்றுகளைக் கலந்து பேசுவதைக் குறித்தும்—நான் வெகுவாய்க் கேள்விப்பட்டிருந்தேன். அவர்களை நேரில்கண்டு பழகவேண்டுமென்ற அவா வெகுநாட்களாய் இருந்து வந்தும் சமீபத்தில்தான் அச்சமயம் கிட்டியது. எதற்கும் வேளையும் பொழுதும் வரவேண்டாமா?

குறிப்பிட்ட தினத்தன்று காலை ஒன்பது மணிக்கு அவர்களை நான் சந்திப்பதென்று முன்கூட்டியே ஏற்பாடாயிருந்தது. இச்சந்திப்பிற்குக் காரணபூதராயிருந்தவர் "கலைமகள்" பத்திராதிபரும் ஐயரவர்களின் அன்பிற்கும் ஆதரவிற்கும் பாத்திரமாயிருப்பவருமான ஸ்ரீ. கி. வா. ஜகந்நாதய்யர் தான்.

ஐயரவர்களின் பவ்ய சுவபாவத்தை அவருடைய வீட்டின் தாழ்ந்த தோற்றம் ஒருவாறு சூசிப்பித்தது. அது நவநாகரிகமுறையில் அமைக்கப்படாமல் சற்றுக் கர்நாடக நீதியிலேயே கட்டப்பட்டிருக்கிறது. வாசற்புறத்தில் திண்ணைகள், உள்ளே கூடம், தாவாரங்கள் முதலியன, நடுவில் திறந்த வெளியான ஓர் முற்றம், முன்கட்டும் பின்கட்டுமாக இரு கட்டுகள், இவைகளையெல்லாம் நோக்கும் பொழுது பழைய முறையில் அமைக்கப்பட்ட விடுதியேயிது என்பது நன்கு விளங்குகிறது.

ஆனால் கூடத்தில் மட்டும் மெத்தை தைத்த "சோபா" ஒன்று போடப்பட்டிருப்பதிலிருந்து நவநாகரிக முறையில் பழகும் பேர்வழிகளையும் இவர் காண நேரிடுகிறதென்பது புலப்படுகிறது.

மாடியிலிருந்து ஐயரவர்கள் கீழே சற்றுப் பிரயாசையுடன் தான் வரவேண்டியிருந்தது. ஏனென்றால் நிறைந்த வயதல்லவா? தள்ளாத பிராயத்தில் ஏற்படும் தேகச் சிரமத்தின் குறிகள் அவருடைய நடையிலும் காணப்பட்டன. பார்வையும் சற்று மங்கியிருக்கிறதாகத் தெரிகிறது. கேவலம் என்பொருட்டு இவரை இவ்வளவு சிரமத்திற்கும் உள்ளாக்கியதற்காக என் மனம் மிகவும் வருந்தியது. மேலும் என்போன்றவரிடம் பேசிக் கழிக்கும் நேரத்தில் அவருடைய தமிழ்த் தாயின் சேவைக்கு எவ்வளவு குந்தகம் ஏற்படும்? இதைக் குறித்தும் என் மனம் வருந்திற்று.

கீழே இறங்கி வந்ததும் என்னைக் கூடத்திலுள்ள "சோபா"வில் அமரச் சொல்லித் தானும் அதிலேயே என்னருகில் உட்கார்ந்தார். அவருக்குச் சமமான பீடத்திலிருக்க நான் மிகவும் அஞ்சினேன், அதை ஒருவாறு வெளி

யிட்டும்விட்டேன். என் தயக்கத்தைக் கவனித்து—

"பரவாயில்லே, உட்காரலாம்," என்று அமைதியும் அடக்கமும் நிறைந்த குர லில் சொன்னுர் ஐயர். அவர் கட்டளேயை நிறைவேற்றுவதைத் தவிர வேறு வழி யில்லே.

அருகில் வேறு ஒரு நாற்காலியில் வீற் றிருந்த ஸ்ரீ. ஜகந்நாதய்யரைச் சுட்டிக் காட்டி,

"தங்களுடைய பிரதாபத்தை இவர் சொல்லிக்கேட்டேன். மிகவும் சந்தோஷ மடைந்தேன்," என்று தன் சம்பாஷணே யைத் தொடங்கினுர்.

எனக்கு இது சற்று ஆச்சரியமே அளித்தது. "பிரதாபம்" என்று சொல் லிக்கொள்ளக்கூடிய யோக்கியதை என் னிடம் என்ன விருந்ததென்பது எனக்கே தெரியவில்லே.

(i) மத விஷயமாய்த் தமிழிலிருந்து ஆங்கிலத்தில் ஒரு மொழி பெயர்ப்பு,

(ii) இயற்கை சாஸ்திரத்தைக் குறி த்து ஆங்கிலத்திலிருந்து தமிழில் ஒரு மொழிபெயர்ப்பு,

(iii) ஓரிரண்டு ஆராய்ச்சிக் கட்டுரை கள்,

(iv) ஓரிரண்டு சிறு கதைகள்,

இவைதான் இதுகாறும் நான் தமிழ்த் தாய்க்குச் செய்திருக்கும் தொண்டு. இதை ஓரளவாக மதித்து "பிரதாபம்" என்று ஐயரவர்கள் குறித்தது எனக்கு நம்பக்கூடாததாகவேயே யிருந்தது.

"இவர் ஏதோ அளவிற்கு மீறி என் னேக் குறித்துச் சொல்லியிருக்கிறுர்போ லிருக்கிறது" என்றேன்.

"இல்லே, இல்லே. அவர் எல்லாம் சரி யாகவே சொன்னுர்" என்று பதி லளித்து மேலும் சம்பாஷணேயைத் தொடர்ந்து நடத்தினுர்.

முதன் முதலில் என்னுடைய யோக க்ஷேமங்களேப்பற்றியும் என்னுடைய பூர் வோத்தரங்களேப்பற்றியும் விசாரித்தார். நம் தமிழ் நாட்டின் தொன்று தொட்டு வந்திருக்கும் முறைகளில் இந்த யோக க்ஷேமத்தை விசாரிப்ப தென்பதும் ஒன்று. ஒருவனுடைய வருவாய் முதலிய வற்றைக் குறித்துத் தானுகவே கேட்ப தென்பது அனுசிதம், ருசித்தவறு, என்றெல்லாம் கருதப்படும் தற்காலக் கொள்கைக்கு நேர் முரணுவது!

ஐயரவர்களுடன் எத்தனே வழி களில் உறவு சம்பாதித்துக் கொள்ள லாமோ அவ்வளவு முறைகளிலும் அதைத் தேடிவிடவேண்டு மென்று என் மனம் பதைபதைத்தது. எனவே, அவர்கள் என்னுடைய சொந்த ஊரைப் பற்றி விசாரிக்கையில் நான்—

"நீங்கள் ஏடு தேடும்போது இந்த ஊரில் ஏதாவது கிடைத்ததுண்டோ,' என்றேன். சேது பந்தன கைங்கர்யத் தில் ஓர் சிறு அணிலும் பங்கெடுத்துக் கொள்ள விரும்பியது போல் என் னுடைய கிராமமும் ஐயரவர்களுக்கு ஏடுகளேத் தந்து உதவியிருக்கிற தென் பதைக் கேட்க வெகு ஆவலாயிருந்தேன்.

என்னுடைய கேள்வியின் உட் குறிப்பை அவர் அறிந்து விட்டார். "இல்லே" என்று நேர்முகமாய்த் தெரி வித்தால் என் மனம் வருத்தமடையலா மென்று இவர் தூய உள்ளம் ஊகித்து விட்டது. மறைமுகமாய்—

"ஏதாவது அங்கு இருப்பதாய் உங் களுக்குக் கேள்வி யுண்டோ?" என்ற பதில் வந்தது. தாம் பேசும் பொழுது பிறரின் மனம் நோவாமல் நடந்து கொள்ளும் பரிசுத்தமானவர்களேக் காண் பது இக்காலத்தில் எவ்வளவு அரிதா யிருக்கிறது?

அடுத்த படியாக,

"அந்த ஊரைப்பற்றி நீங்கள் கேள்விப் பட்டாவது இருக்கிறீர்களா?" என்று கேட்டேன். எப்படியாவது அவருக் கும் இவ்வூருக்கும் ஒரு சம்பந்தத்தைக் கற்பித்து அதில் ஒரு திருப்தியடைய விரும்பினேன்!

"ஆஹா, அதென்ன அப்படிக் கேட்கி றீர்கள்? அவ்வூர் எனக்கு நன்ருய்த் தெரியும். நான் கும்பகோணம் கல்லூரி யிலிருந்து விலகுகையில் என் ஸ்தா

னத்தை ஓர் வைஷ்ணவ பிராமணர் எடுத்துக்கொண்டார். அவர் இந்த ஊர் மாப்பிள்ளைதான்" என்றார்.

இதைக்கேட்டுக் களித்தேன். நான் தோன்றிய சிற்றூரும் இப் பெரியாருக்குப் பரிச்சிய முள்ளதாயிருந்தது!

என் பூர்வோத்தரத்தை விசாரிக்கையில் என்னுடைய நெருங்கிய உறவினர் ஒருவர் ஐயர் அவர்களிடம் பாடங்கேட்ட ஒரு தமிழ்ப் பண்டிதரிடம் படித்ததாக ஏற்கனவே தன்னிடம் கூறியிருப்பதாகத் தெரிவித்தார்.

எங்கள் ஜில்லாவில் ஒரு சைவ சமயத்தைச் சேர்ந்த பிரபலமான மடத்தில் தலைவராயிருக்கும் ஞானியார் என்பவரைக் குறித்துப் பேசலானோம். இளமையில் இவருடைய பிரசங்கங்களை நான் கேட்டதுண்டென்று பிரஸ்தாபித்தேன். அம்மடாதிபதியின் தமிழ் வித்வத்தை ஐயரவர்கள் பாராட்டியதுடன் தங்களுக்குள் பரஸ்பரம் அன்பு உண்டென்றும் கூறினர். இம்மடாதிபதியினிடம் பாடங்கேட்டவர்கள் பலருண்டு. அவர்கள் எல்லோரும் பல விஷயங்களைப் பற்றிச் சிறிய உபந்நியாசங்களை நிகழ்த்தக் கூடிய பயிற்சி பெற்றிருந்தனர். அவர்களுள் காலஞ்சென்ற மணம்பூண்டி ரா. குமாரசாமிப் பிள்ளையென்பவர் ஒருவர். அவர் மிக அழகாக சிறு பிரசங்கங்கள் செய்ய வல்லவர். சிறு வயதில் பல முறை அவருடைய உபந்நியாசங்களை நான் கேட்டு இன்ப முற்றதுண்டென்று அய்யரவர்களிடம் தெரிவித்துக் கொண்டேன். இந்த கோஷ்டியில் எல்லோரும் தனக்குப் பழக்க மென்றும், அதிலும் குமாரசாமிப் பிள்ளையை நன்றாய்த் தெரியுமென்றும் சொன்னர். இவருடைய பிரசங்கங்களில் ஒரு அபூர்வ "சொற் சாதுரிய" முண்டென்றும்' விஷயம் ஒன்றுமில்லாமல் எவ்வளவு நாழிகை வேண்டுமானாலும் கேட்போருக்கு ரஸிக்கும்படி பேசுவதில் இவர் சமர்த்தர் என்றும் கூறினர்.

மத விஷயமான என்னுடைய மொழி பெயர்ப்பு நூலைக் குறிக்கையில் காமகோடி பீடாதிபதி அவாகளின் பேச்சு வந்தது. அதற்குச் சில நாட்கள் முன்பு தான் இவ்வாசார்யாள் சிவகங்கை மன்னருக்கு ஒரு பட்டமளித்த சங்கதி சமாசாரப் பத்திரிகைகளில் வெளிவந்திருந்தது. "சாந்த மண்டலபதி" என்னும் அப்பட்டத்தில் "மண்டலம்" என்னும் பிரயோகத்தினுடைய பொருத்தத்தைக் குறித்துப் பாராட்டி விட்டு ஸ்ரீ ஆசாரியாளின் தமிழ் அபிமானத்தையும் தமிழில் உள்ள பயிற்சியையும் எடுத்துக் காட்டினர்.

முற்றத்தில் ஐயரவர்களின் பேரப் பிள்ளைகள் கள்ளங்கபடின்றி விளையாடியது எங்கள் கவனத்தைக் கவர்ந்தது. அவர்கள் செய்த சத்தம் சற்று பலக்கவே இரைச்சலைக் குறைக்கவேண்டி அவர்களைக் கொஞ்சம் அதட்டிவிட்டு ஐயரவர்கள் என்னை நோக்கி,

"இந்தக் காலத்தில் பிள்ளைகள் எங்கே சொன்ன பேச்சைக் கேட்கின்றனர்? நல்ல விஷயங்களில் அவர்களுடைய புத்தி பிரவேசிக்கிறதில்லை. தலைமயிரைக் "கிராப்பு" செய்துகொண்டு, சதா அதை வாரிவிடுவது, "சோப்பு" போட்டுக் கொண்டு முகத்தை அலம்புவதுந்தான் காரியம்" என்றார். பழைய நாள் மனிதர்களுக்குப் புதுநாகரீகச் சின்னங்களாகிய இவைகளிடம் வெறுப்பிருப்பது சகஜம்.

என்னிடமும் இவ்விரு வழக்கங்களும் உண்டாகையால் உடனே நான், "நீங்கள் இப்பொழுது சொன்ன தவ்வளவும் எனக்கும் பொருந்தும் "என்றேன்," என்னையே நொந்துகொண்டு.

எதிர்பாராத வண்ணம் என்னையும் குறித்துவிட்டதை ஐயர் அறிந்து கொண்டார்.

"அதற்கென்ன. உங்களிடம் எவ்வளவோ நல்ல விஷயங்கள் இருக்கின்றனவே" என்றார் ஒருவாறு ஆறுதலாக.

இம்மாதிரி காலஹரணம் செய்து அவருடைய தமிழ்த் தொண்டிற்குக் குறுக்கே நிற்க மனமின்றி, "நான் போய்

வருகிறேன். இவ்வளவு நேரம் உங்கள் நேரத்தை வீண் போக்கி விட்டேன். இன்னும் உங்களாலாகவேண்டிய காரியங்கள் பல இருக்கின்றன" என்றேன். ஐயரவர்களின் சுய சரிதையும், கம்ப ராமாயணத்திற்குப் பரிசுத்தமான ஒரு வெளியீடும் இவைகளுள் முக்கியமானவை என்பது தமிழன்பர்கட்குத் தெரிந்த விஷயமே.

"பரவாயில்லை" யென்று நான் கூறியதற்கு விடையளித்துவிட்டு, "ஏதாவது என்னால் செய்யவேண்டுவது இருந்தால் சொல்லிக்கொள்ளலாம்," என்றார். இந்தத் தள்ளாத வயதிலும் பிறருக்குத் தன்னாலானமட்டில் உதவ வேண்டுமென்ற ஓர் ஆசை!

"அப்படி யொன்றுமில்லை. நான் தங்களைத் தரிசிக்கவே வந்தேன்" என்றேன்.

எல்லோரும் எழுந்தோம். கடைசியாக அவரிடம் உத்தரவு பெற்றுக் கொள்ளுகையில் "விடாமல் தமிழைப் படித்து வாருங்கள்" என்று போதித்தார். நானிருந்து வருமிடம் சென்னையிலிருந்து ஆயிரம் மைல்களுக்கு அப்பாலுள்ளது. ஆகையால், "நான் தொலை தூரத்தில் இருப்பதால் சொல்லிக்கொடுக்கக்கூடியவர் ஒருவருமே இல்லாமல் தவிக்கிறேன்" என்றேன்.

"வேண்டியதில்லை. உரையுடனுள்ள பதிப்புகளிலிருந்தே படிக்கலாம்" என்று சொன்னார்.

அந்த சந்தர்ப்பத்தில் நானிருக்குமிடத்தில் அத்திபூத்தாற்போல் இன்னுமொரு தமிழன்பரும் உண்டென்பது நினைவு வந்தது. இவரையும் ஐயரவர்களுக்குத் தெரியும். ஆகையால் இவரைக் குறித்துப் பிரஸ்தாபித்தேன். இவருடைய மாமனார் ஒரு பெரிய அறிவாளி. அவர் தான் திருவாங்கூர் சமஸ்தானத்தில் நீதிபதியாயிருந்து விலகிய கே. ஜி. சேஷய்யர் என்பவர். ஸமஸ்கிருதத்திலும் தமிழிலும் நிரம்பப் பயிற்சியுள்ளதுடன் இந்து தேச சரித்திர விஷயமாகவும் பல அரிய ஆராய்ச்சிகளைச் செய்திருக்கிறார். அவரும் ஐயரவர்களுக்கு நெருங்கிய பழக்கம். கடைச்சங்க நூல்களுள் பதினெண் கணக்கிலடங்கிய எட்டுத்தொகையில் ஒன்றாகிய பதிற்றுப்பத்திலிருந்து தொகுத்த சேர மன்னர்களின் சரித்திர வரலாறு ஒன்று இந்த சேஷய்யர் என்பவர் கடைசியாக வெளியிட்ட நூல். அவர் காலஞ் சென்றதைக் குறிப்பிட "சமீபத்தில் தான் அவர் தவறி விட்டார்" என்றேன். ஒரு புன்முறுவலுடன் "அவர் ஒருநாளும் தவறவேயில்லை" என்று சொன்னார். ஐயர் அவர்களின் சிலேடைக்கு ஒரு பிரமேயம் அளித்ததற்காக வெட்கினேன்.

வீட்டை நோக்கித் திரும்புகையில் "கூடினேன் கூடி இளையவர் தம்மொடு அவர் தரும் கலவியே பெரிதெனக் கருதி" என்று ஆழ்வார் கதறியதுபோல், இத்தனை வருஷங்களாக இப்பெரியாரின் பழக்கத்தைத் தேடிக்கொள்ளாமல் காலத்தை வீண்போக்கி விட்டதை யெண்ணி வருந்தினேன்.

# புத்தக விமர்சனம்

## 1914-39 ஹிட்லரும் மஹா யுத்தமும்

(ஸ்ரீ ஏ. ஜி. வெங்கடாச்சாரி எழுதியது. **400** பக்கங்கள். விலை ரூ. **1-4-0**. பிருந்தாவன பிரசுராலயம், மைலாப்பூர் சென்னை.)

இரண்டாவது மஹா யுத்தமும் ஆரம்பமாகி ஒரு மாதத்திற்கு மேலாகி விட்டது. நாமெல்லோரும் ஆவலுடனும் கவலையுடனும், மனம் பதைக்க யுத்தச் செய்திகளைப் பத்திரிகைகளில் படிக்கிறோம். ஹிட்லரிஸம் ஒழிந்தால்தான் உலகத்துக்கு க்ஷேமம் உண்டு என்று பொதுப்படையாக ஒப்புக்கொள்ளவும் செய்கிறோம். நாம் விரும்புவது போல் அல்லது நமக்குப் புலப்படுவது போல் அல்லது நம்பப்படுவது போல் சம்பவங்கள் நடைபெற வில்லையே என்று வருந்துகிறோம், அல்லது வியப்படைகிறோம். இந்த யுத்தம் பல வருஷங்கள் நடக்கும் போலிருக்கிறது. ஸீக்பிரெட் அரணை பிரிட்டிஷ் பிரெஞ்சு துருப்புகள் இப்பொழுதுதான் நிமிண்டவாரம்பித்திருக்கின்றன. ஸோவியத் ரஷ்யா மிகப் பெரிய புதிராய் யிருக்கிறது. இந்த யுத்தத்தின் போக்கு ஸோவியத் மனப்பான்மையுடன் நெருங்கிய இணை பிரியா சம்பந்தமுள்ளதாகத் தென்படுகிறது. எனவே, பல கேள்விகள் நமது மனதில் அடுக்கடுக்காய் எழுகின்றன. நடப்பது தர்ம யுத்தந்தானா? ரஷ்யா உலகையே பிரமிக்க வைத்துப் போலந்தை ஜெர்மனியுடன் பங்கு போட்டுக் கொண்டது நியாயமா? ஜெர்மனி ஸோவியத் நாடாகுமா? உடனடியாக கிழக்கு ஐரோப்பாவில் என்ன நடக்கும்? இந்தியாவுக்கு ஆபத்து உண்டா? அமெரிக்கா சண்டையில் சேருமா? இத்தாலி என்னதான் செய்யப்போகிறது? சீனாவின் கதி யென்ன? ஐரோப்பிய நாடுகளின் தராதர பலமும் வசதிகளும் யாவை? இவை போன்ற எல்லாக் கேள்விகளும் **ஸ்ரீ. ஏ. ஜி. வெங்கடாச்சாரி** தம்முடைய விரிவான புஸ்தகத்தில் விளக்கமாய்ப் பதிலளித்திருக்கிறாரென்றால் மேலே பேச்சுக்கே இடமில்லை.

ஹிட்லரின் வரலாறு. அவருடைய சுய சரிதையின் சுருக்கம் எப்படி, அவர் வீழ்ச்சி யுற்றிருந்த ஜெர்மனியைப் பெரிய வல்லரசாக்கி பல நாடுகளை விழுங்கி இன்று உலகிற்கே பேர் ஆபத்தாய் விளங்குகிறார் என்பவைகளை விளக்கும் அத்தியாயங்கள் நிகரற்றவை. இவை யெல்லாவற்றிற்கும் அஸ்திவாரமா யிருந்தது வெர்ஸேல்ஸ் அநீதிதான். எனவே ஆசிரியர் சென்ற மாகா யுத்தத்திலிருந்து தொடங்கி வெர்ஸேல்ஸ் அநீதிகளையும் ஜெர்மனியின் தலை குனிந்த வாழ்வையும் விவரித்து, அவை எப்படி ஹிட்லரிஸத்தில் கொண்டுபோய் விடப்பட்டன என்பதை எடுத்துக் கூறுகிறார்.

ரோம், பெர்லின், அச்சின் வரலாறு முஸொலினியின் மண்ணாசை ஸர்வ தேச சங்கத்தின் வளர்ச்சியும், தோல்வியும் முதலிய அருமையான விஷயங்கள் சேர்க்கையாகத் தரப்பட்டுள்ளன. அமெரிக்காவின் வெளிநாட்டுக் கொள்கை, ஜெர்மனியின் காலனி கோரிக்கை இரண்டும் ஆழ்ந்து கவனிக்கவேண்டியவை. அவை மிகவும் தெளிவாக எழுதப்பட்டுள்ளன. எல்லா ஐரோப்பிய நாடுகளையும் பற்றி முழு விவரங்கள் ஏராளமான படங்களுடன் தரப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. முகவுரை எழுதியிருக்கும் **கனம்** டாக்டர் **சுப்பரா**யன் கூறியிருப்பது போல் இப்புத்தகம் தற்காலத்திய நிலைமை அறிந்து கொள்வதற்கு நல்ல ஏதுவாகும். தமிழ் நாட்டிற்கு ஆசிரியர் இதனால் ஒரு பேருதவி செய்துள்ளார் என்று டாக்டர் **சுப்பராயன்** கூறியிருப்பது மிகையாகாது. "சமீபத்தில்தான் பூர்ண ராஜீய வாழ்க்கைக்கு அறிமுகப்படுத்தப்பட்ட மக்களுக்கு இந்தப் புத்தகத்தில் காணப்படுவது போன்ற அறிவு வளர்ச்சி விஷயங்களைத் தருவது போற்றற்குரிய ராஜீய சேவையாகும்" என்று முன்னுரை யெழுதியுள்ள பேரறிஞர் **ஸ்ரீ எம். ரத்தனஸ்வாமி**யின் சிபார்சே

இந்தப் புத்தகத்தின் மேன்மையை விளக்குகிறது. தமிழில் இம்மாதிரி புத்தகமே, இதுவரை வெளிவந்ததில்லை. 1914 முதல் 1938 செப்டம்பர் 23உ நடைபெற்ற ருமேனியா பிரதம மந்திரி கொலைவரையுள்ள விஷயங்களை தொடர்ச்சியாக எடுத்துச் சொல்லும் நூல் ஆங்கிலத்தில் கூடக் கிடையாது. தமிழ் தெரிந்த ஒவ்வொரு வீட்டிலும் இப்புத்தகம் இருத்தல் அவசியம். புத்தகம் உயர்ந்த சுதேசி கிளேஸ் காகிதத்தில், காலிகோ, பைண்டுடன் கவர்ச்சியான முகப்புப் படத்துடன் வெளியாகியிருக்கிறது. இதைத் தங்கள் முதல் பிரசுரமாகப்பெற்ற **பிருந்தாவன பிரசுராலயத்தாரை** வாழ்த்துகிறோம்.

## ஸ்ரீ த்ரிபுராபரணம்

[ஸ்ரீ ராமேச்வர தேவஸ்தான ஸம்ஸ்கிருத பாடசாலையின் அத்தியாபகரான பிரம்மஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகளால் இயற்றப்பட்டது. மதுரையிலுள்ள A. S. D. பிரஸில் அச்சிடப்பட்டது.]

இச்சிறந்த ஸ்தோத்ரக் கிரந்தம் "ப்ருத்வீ" என்னும் விருத்தத்தினல் இயற்றப் பட்டிருக்கிறது. நூறு சுலோகங்கள் கொண்டது. சுலோகங்கள் மிகவும் கம்பீரமாகவும், அரிய பிரயோகங்களைக் கொண்டதாகவும், வேதாந்த தேசிகரின் சுலோகங்கள் போலவும் விளங்குகின்றன. லோக மாதாவினிடத்தில் வித்வத் கவியான சாஸ்திரிகளுக்குள்ள பக்தி எல்லா சுலோகங்களிலும் பிரகாசிக்கிறது. தன் பக்தியின் பிரவாக ரூபமான இம்மேலான கிரந்தத்தைப் பிரசுரம் செய்து லோகத்தை அனுக்ரகித்த சாஸ்திரிகளின் முயற்சி போற்றத் தக்கது. மேலும் இது போன்ற கிரந்தங்களை வெளியிட்டு வித்வான்களையும் இக்கிரந்த கர்த்தா பரவசப் படுத்துவாரென்று எதிர்பார்க்கிறோம்.

புத்தகத்தின் கடைசியில் "ஸ்ரீ மதாசார்ய பஞ்சரத்னம்" என்னும் ஸ்தோத்ரமும் சேர்க்கப் பட்டிருக்கிறது.

ரா. ரா.

## "சக்தி"

### (மாதப் பத்திரிகை. விலை அணு 4.)

பிரசுரம் - சாந்தி பிரஸ் லிமிடெட். 52 அரண்மனைக்காரத் தெரு, சென்னை.

இந்தப் பத்திரிகையின் இரண்டு இதழ்கள் வரப் பெற்றோம். இதன் நிர்வாக ஆசிரியர்-வை. கோவிந்தன் அவர்கள். மஹாமஹோபாத்யாய உ. வே. சாமிநாதையர் அவர்கள், ராவ் சாஹிப்-வித்வான் மு. இராகவ ஐயங்கார் அவர்கள், திரு ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள் இன்னும் இவர்கள் போன்ற பிரபல எழுத்தாளர்கள் இப்பத்திரிகைக்கு விஷயதானம் புரிகின்றனர். பத்திரிகை ரஸமான ஆராய்ச்சிக் கட்டுரைகளுடன் வெளியாகிறது. பிறமொழிகளின் ஆதிக்கத்தால் சக்தி யொடுங்கிக் கிடக்கும் தமிழுக்கு இந்த "சக்தி"—ஒரு சக்தியைக் கொடுக்கும் என்பதில் ஐயமில்லை. பத்திரிகை பிழையில்லாமல் உயர்ந்த தாளில் வெளியாகிறது. பார்வைக்கு அழகாகவும் இருக்கிறது. இது தமிழரின் உணர்ச்சியைத் தட்டியெழுப்பிப் பண்டைய தமிழரின் வாழ்க்கையைச் சித்தரித்துக் காட்டி அவர்களை முன்னுக்குக் கொண்டுவரும் என்று கூறுவது மிகையாகாது.

# மளிகைக்கடை மாணிக்கம் செட்டி

(ஜி. பாலசுப்பிரமண்யம்)

## அத்தியாயம் X

கொட்டையூரில்கோவிந்தய்யரும் அவர் சம்சாரமும் தங்கள் நாட்டுப் பெண்ணைப் பற்றி புகழ்ந்து மேற்சொல்லியவாறு பேசிக் கொண்டிருக்கையில் கும்பகோணத்தில் ராமுடுவிடம் தன் மாமனர் இராமலிங்கய்யர் வியாபார சம்மந்தமாய் அவன் தெரிந்து கொண்ட விஷயங்களைப் பற்றிக் கேட்டுக் கொண்டிருந்தார்.

**இராமலிங்க அய்யர்;**—என்ன. ராமுடு, கம்பெனியில் வியாபாரங்கள் நடக்க ஆரம்பித்து விட்டதே—உனக்கு அங்கிருப்பது திருப்திகரமாக விருக்கிறதா அல்லது வேறு ஏதாவது வேலைக்குப் பிரயத்தனம் செய்தால் உசிதமாயிருக்குமா? இந்த நாளில் பிறரிடத்தில் சேவகா விருத்தி செய்வதானது மிகவும் கேவலமாயிருக்கிறது. ஏதாவது ஸர்க்கார் உத்தியோகம் உனக்கு செய்து வைக்க என்னல் முடியும். இருந்தாலும் அதைவிட நீ இப்போது அமர்ந்திருக்கும் இடமே சௌகரியமானது என்று அபிப்பிராயப் படுகிறேன். இந்த கம்பெனியின் வியாபாரம் விருத்தியானல் உன் பதவியும் அத்துடன் விருத்தியாவதோடு கூட உன் பெற்ருேர்களை விட்டு நீ பிரியாமல் இருந்து உன் கிராம காரியங்களையும் கவனிப்பதற்கு அவகாசமிருக்குமென்று எண்ணுகிறேன். நீ இது வரையில் என்ன தெரிந்து கொண்டாய்? விவரமாய்ச் சொல்லுவாயா?

**ராமுடு :**—மாமா! எனக்கு இக் கம்பெனி வேலையே மிகவும் திருப்திகரமாய் இருக்கிறது. இவைத் தீவிரமாய் கவனித்தால் நாம் இந்தப் பக்கங்களில் மிகவும் கீர்த்தியுள்ளவர்களாக ஆவதுடன் பல பேர்வழிகளுக்கும் உபகாரமாக விருக்கலாமென்று எண்ணுகிறேன். பிரதி தினமும் நான்தான் பாங்கிக்குப் போய்வருகிறேன். அங்கு என் சினேகிதன் ஒருவன் வேலையில் இருக்கிருன். அவனிடம் பாங்கில் ஒரு அரைமணி நேரம் பேசிக் கொண்டிருப்பேன். அவன் தன் பாங்க் மூலமாய் வியாபாரிகளுக்கு ஏற்படும் சௌகரியங்களைப் பற்றிச் சொல்லுவான். அவைகளை கவனமாய்க் கேட்டுக் கொண்டிருந்து நம்முடைய வியாபாரத்தை பாங்கின் உதவியைக் கொண்டு விருத்தி செய்யலாம் என்று யோசித்துக் கொண்டே இருக்கிறேன். செட்டியார் மகன் குப்புடுவும் அநேக புஸ்தகங்கள் வாங்கி வாசித்துக் கொண்டிருக்கிருன். அவைகளை என்னிடமும் கொடுத்து வாசிக்கச் சொல்லுகிருன். நாங்களிருவரும் ஒருவருக்கொருவர் கலந்து கொண்டு என்ன வியாபாரம் செய்வது லாபகரமாயிருக்கும் என்று ஓர் முடிவுக்கு வந்து பிறகு எங்கள் அபிப்பிராயத்தை மாணிக்கம் செட்டியாருக்குத் தெரிவிப்போம். அவர் இதுவரையில் நாங்கள் சொன்னதைத் தடுத்துச் சொன்னதில்லை சென்றவாரம் நாங்கள் கொலம்போவுக்கு அரிசி யனுப்பின பிறகு அங்கு அரிசி விலை அதிகரித்து விட்டதாக நேற்று தாகல் கிடைத்திருக்கிறது. நாங்கள் அனுப்பிய அரிசி மூட்டைகள் லாபகரமாய் விற்கப்படும். எள்ளு மூட்டைகளும் இன்று அல்லது நாளை வந்து விடும். அவைகளிலும் எங்களுக்கு லாபம் வருமென்றுதான் செட்டியார் அபிப்பிராயப் படுகிருர்.

பொதுவாக எனக்கு இந்த வியாபாரத்தில் பிடிப்பு ஏற்பட்டு விட்டது. இதையே விருத்தி செய்யலாம் என்றுதான் நான் எண்ணுகிறேன். எனக்கு இதைவிட்டு வேறு வேலைக்குப் பிரயத்தனம் செய்ய மனமில்லை.

**இராமலிங்க அய்யர் :**—அதுதான் சரி. என் மனம்போல் உனக்கும் தோன்றியது. பற்றி எனக்கு சந்தோஷம். மேலும் வியாபாரத்தில் நம்முடைய முதலும் இருக்கிறபடியால் நாமும் நேரில் கவனித்து வந்தால்தான் நம் மனதுக்கு சமாதானமாயிருக்கும்.

**ராமுடு :**—கிருஷ்ணமூர்த்திதான். சென்ற வருஷம் வரையில் அவன் என்னேடு காலேஜில் வாசித்துக்கொண்டிருந்தான். பி.ஏ. டிகிரி எடுத்துக்கொண்டான். நாங்களிருவரும் காலேஜில் வாசித்துக்கொண்டிருக்கும்போது அந்தரங்க சினேகிதர்கள். அவன் மிகவும் நல்ல பையன். பாங்க் விஷயங்களைப்பற்றி

அநேகம் கிரந்தம் வாசித்திருக்கிறான். என்னிடமும் சில புஸ்தகங்களைக் கொடுத்து வாசிக்கச் சொல்லியிருக்கிறான். பாங்க் நடவடிக்கைகளைக் கற்றுக்கொள்ள நானும் மிக ஆவலுள்ளவனாகவிருக்கிறேன், நமது ஜனங்களுக்கு பாங்கினால் ஏற்படும் சௌகரியங்களைப்பற்றி நான் இதுவரையில் தெரிந்துகொண்டிருப்பதிலிருந்து நமது பொது ஜனங்கள் இதைப் பூராவாகத் தெரிந்துகொள்ளவில்லையே என்று நான் விசனித்துக்கொண்டிருக்கிறேன். அவர்கள் மாத்திரம் அதை நன்றாய்த் தெரிந்து கொண்டுவிட்டால் நமது தேசம் வெகு சீக்கிரம் முன்னேற்றமடையும் என்பதில் சந்தேகமில்லை.

இராமலிங்கய்யர் :— இந்த கிருஷ்ண மூர்த்தியா ! அவன் புத்திசாலி பையன்தான். அதிக நாள் ஆகாத போனாலும் அவன் வேலை மிகவும் ஒழுங்காகச் செய்துகொண்டிருப்பதாகத்தான் பாங்க் மானேஜர் சொல்லுகிறார். நான் மீட்டிங்கில் போயிருந்த போதும் அந்தப் பையன் எங்களுக்கு வேண்டிய பேபர்களை எல்லாம் ஒழுங்காக வைத்து ஒவ்வொன்றிலும் அவைகளின் விவரங்களைப்பற்றிச் சுருக்கமாயும் தெளிவாயும் எழுதி வைத்திருக்கிறான். கூடிய சீக்கிரம் அவன் நல்ல பதவிக்கு வருவான் என்பதில் சந்தேகமில்லை. பாங்கின் ரகசியம் மாத்திரம் உனக்கு ஒன்றும் சொல்ல மாட்டான் — என்று எண்ணுகிறேன். பாங்கில் நியமனம் செய்யப்பட்ட ஒவ்வொரு சிப்பந்திகளையும் பாங்க் நடவடிக்கைகளைப் பற்றி வெளியில் ஒன்றும் பேசாமலிருக்க வேண்டுமென்று நாங்கள் கண்டித்திருக்கிறோம். அதுதான் பாங்க் சிப்பந்திகளின் முக்கியமான கடமை. பாங்க் சமாசாரத்தைப்பற்றி யார் வெளியிடுகிறார்களோ அவர்கள் பாங்கில் வேலை செய்ய உரிமைப்பட்டவர்களல்ல. யாரால் பாங்க் ரகசியங்கள் வெளியிடப்படுகிறதோ அவர்கள் அந்த க்ஷணமே பாங்கியிலிருந்து நீக்கப்படுவார்கள். நீ உன் சினேகிதன் என்று எண்ணி அவனை ஒரு விஷயமும் கேட்கக்கூடாது, அவனும் உனக்கு ஒன்றும் சொல்லக்கூடாது. அதே மாதிரி நீ கம்பெனியில் நடக்கும் வியாபாரத்தைப்பற்றியும் ஒன்றும் வெளியிடக் கூடாது. வியாபாரத்தில் விஷயங்களை ரகசியமாய் வைத்துக்கொள்ள வேண்டியதானது மிகவும் அத்தியாவசியம். இதை நீ எப்போதும் மறக்கக்கூடாது.

ராமுடு :—பொதுவாக பாங்கில் நடக்கும் முறைகளைப் பற்றி மாத்திரம்தான் அவன் என்னிடம் சொல்லுவானே யொழிய அங்கு பத்து வரவு செய்யும் ஆசாமிகளைப் பற்றி யாவது அவர்கள் செய்யும் வியாபாரத்தைப் பற்றியாவது அவன் என்னிடம் சொல்ல மாட்டான். நானும் அது சம்பந்தமாய் அவனை ஒன்றும் கேட்கமாட்டேன். நான் அவனிடம் வந்து உட்கார்ந்தபோது பாங்க் கடிதங்கள் ஏதாவது அவன் மேஜையிலிருந்தால் அவைகளை எல்லாம் எடுத்து மேஜை இழுப்புக்குள் வைத்து மூடிவிட்ட பிறகுதான் என்னுடன் பேச ஆரம்பிப்பான். என் வியாபார சம்பந்தமாயும் நான் வெளியில் ஒன்றும் பேசுவதில்லை. நாங்கள் எள்ளு மூட்டைகளுக்கு ஆர்டர் செய்த போது மாணிக்கம் செட்டியார் எங்களிருவரிடத்திலும், நாங்கள் ஆர்டர்கொடுத்த விஷயம் வெளியில் தெரியக்கூடாது என்று கண்டித்துச் சொன்னார்.

இராமலிங்க அய்யர் :—செட்டியார் வியாபாரத்தில் எவ்வளவு நாள் அனுபோகமுள்ளவர் ? அவருக்குத் தெரியாதா அந்த வியாபார முறை?

ராமுடு :—இப்போது 8 மணி ஆய்விட்டது. செட்டியாரும் கும்புடுவும் இன்னும் அரைமணிக்கெல்லாம் ஆபீசுக்குவந்து விடுவார்கள். தபாலும் வந்துவிடும் நான் போய் வருகிறேன். நான் மத்தியானம் 12 மணி சுமாருக்கு வந்து சாப்பிடுவேன்.

இராமலிங்கய்யர் :—சரி. இன்று கோர்ட்டில் எனக்கு ஒரு மணிக்கு முன்னால் வேலை ஒன்றும் இல்லை. இதோ செட்டியார் கேட்டபடி பாங்க் பாரங்கள் வந்திருக்கின்றன. அவைகளைக் கொண்டு போய் அவரிடம் கொடுத்து பாங்கில் கணக்குத் திறந்து கொள்ளச் சொல்லு, இதோ மற்றொரு பாரமும் இருக்கிறது. இதை நான் பூர்த்தி செய்திருக்கிறேன். உன் சம்சாரம் கங்கம்மாள் பேரில் இன்றைக்கு நீயே பாங்கில் ஓர் கணக்கைத்திறந்து கொண்டு இந்த ரூ 500 யும் அதில் செலுத்திவிட்டு கைச்சாத்துப் புஸ்தகத்தையும் வாங்கிக் கொண்டு வந்துவிடு. மற்ற விவரம் நீ மத்தியானம் சாப்பிடவரும்போது அவகாசமிருந்தால் பேசிக் கொள்ளலாம்.

(தொடரும்)

# கிராம சேவை




(ராவ்சாகிப்—கே. சுப்ரமணியம்)

“சரி. எப்படி எப்படி அந்த ஐக்கிய சபை (items) ஐயிட்டங்கள்? இதற்குப் பேர். கிராமத்தார் முன்னேற்ற சபை என்று பேர் வை. அல்லது அந்தமாதிரி வேறு ஏதாவது நாமகரணம் செய். அதில் கீழ்க்கண்ட விஷயங்களைக் குறி.

1. தன் முயற்சி, சிக்கனம், கூட்டுறவு இவைகளை அங்கத்தினர்களிடம் ஏற்படுத்துவது.

2. அநாவசிய வழியில் ஏற்படும் பொருட் செலவைக் குறைப்பது.

3. கிராமத்திலும் அங்கத்தினர்களிடத்திலும் காணப்படும் கெட்ட வழக்கங்களை ஒழிப்பது.

4. விவசாய முன்னேற்றத்திற்கும் ஆடு மாடுகளை வளர்ப்பதற்கும் அறிவைப் பயன் படுத்துதல்.

5. மேற்கூறிய விஷயங்களை வழக்கத்திற் கொண்டுவருவது.

6. கிராம முன்னேற்றத்திற்கான வேலைகளைச் செய்வது. அதாவது—நீர்ப்பாசனம் ஏற்படுத்துவது, அசுத்த ஜலம் போவதற்கான ஏற்பாடு செய்வது, குளம் வெட்டுவது. விவசாய முன்னேற்றத்திற்கும் அங்கத்தினர்களின் அபிவிர்த்திக்கும் உபயோகமுள்ள விஷயங்களைச் செய்வது.

7. தொழிலாளர்களிடம் கீழ்ப்படிதல், காலந்தவறுமை முதலிய நற்குணங்கள் சிறந்து விளங்கும்படி செய்து அவர்களைத் தொழிலில் தேர்ச்சி யடையச் செய்தல்.

8. உள்நாட்டுக் கைத்தொழில்கள் முன்னேற்றமடையச் செய்தல். வேலையில்லாதவர்களுக்கு அதன் மூலம் வேலையேற்படும்படி செய்தல்.

9. கிராமத்தில் சுகாதாரம் நிலைக்கச் செய்தல். ஆலய உற்சவாதிகளைச் சரியாய் நடத்துதல். பயிரைப் பாதுகாத்தல்.

10. நிலத்தை வைத்துக்கொண்டு நிர்வகிக்க முடியாதவர்களிடமிருந்து நிலத்தைக் குத்தகைக்கு வாங்கிப் பயிர்த் தொழிலை விருத்திக்குக் கொண்டு வருதல். பாழ் நிலங்களை உபயோகமுள்ளவைகளாக்குதல். வேலையில்லாதவர்களை அபிவிருத்திக்குரிய வழிகளில் வேலை செய்யும்படி அமர்த்துதல்.

11. கிராமத்திற் செய்த சாமான்களையும், அல்லது உள்நாட்டுச் சாமான்களையும் கூடுமானவரையில் உபயோகப் படுத்துவது. அந்நியச் சாமான்களைக் கூடுமான வரையில் பகிஷ்கரித்தல்.

12. அவசியம் நேர்ந்தபோது மேற்கூறியவைகளைச் சரியாய் நடத்த, அங்கத்தினர்களிடமிருந்து ஒரு நிதி சேர்ப்பது.

இப்போ பள்ளிக்கூடங்கள் பஞ்சாயத்து போர்டு பஞ்சாயத்து கோர்ட்டு எல்லாம் வேறேயாயிருக்கு. நாம் நன்றாக இந்த (association)ஐ நடத்தினால் போதுமானது. மேற் சொன்னவைகள் நம்மகிட்ட வந்தாலும் நல்லது தான். இந்த மாதிரி எழுதி எல்லாரையும் கையெழுத்துப் போட்டு ரிஜிஸ்டிராருக்கு அனுப்பிச்சு விடுங்கோ. ஆனால் சிலபேர் தயங்குவான்கள். ஏன்னா இவர்கள் உள்ளவே தகல்பாச்சு பண்ணிக் கொண்டு கோவில், குளம், வாய்க்கால் என்றெல்லாம் சொல்லிக் காசு வாங்கிக்

கணக்குச் சொல்லாமல் திரியமுன்கள். அவன்களுக்காக நீங்கள் பின்வாங்கவேண் டியதில்லை. அவன்களும் முன்னுலே கேலி செய்வான். ஏளனம் பண்ணுவான்கள். கொஞ்சம் போனபிறகு கத்துவான்கள்; திட்டுவான்கள் சண்டைக்குவருவான்கள்; அப்புறம் எதிர்ப்பான்கள். இல்லாத தெல்லாம் சொல்லுவான்கள். ஒண்ணும் முடியாத போனல் பலே பேஷ் என்று சபாஷ் போடுவான்கள். இதெல்லாம் கவனிக்காமல் காரியத்தை நடத்தும், பின் னுலே விவரமா விஷயங்களைப் பேசு வோமே.

"10, 12 (Items) அயிடங்கள் சொன் னியளே, அதெல்லாம் விவரமா எதற் காக என்று சொல்லுங்கோ.

"முதல்லே தன்முயற்சி, சிக்கனம், ஒத்துழைப்பு என்று சொன்னேனே. உங்களுக்கே மனதுலே நன்ருய்த் தெரிந் திருக்கும். நம்மாலேயே செய்யக்கூடிய வேலையை நாமே செய்துகொள்றது. அதிலே காசும் செலவில்லை. (அதிகமாய்). இப்போ பாரேன். நம்ம பசங்கள் காலெண் டர் (Calender) மாட்டறதுக்கு சுவரிலே ஆணி அடிக்கணும்னு தச்சன் வர ணும். கொத்தன் வரணும் என்கிருன் கள். இதை நாமே செய்துகொள்ளப் படாதா? வீட்டிலே விறகு உடைக் கணும். நாமே ஏன் கட்டையைப் பிளந்து போடப்படாது. இதே மாதிரி கீத்து முடையப்படாதா? தென்னம்மட்டை நாறைக் கயிறு திரிக்கப்படாதா? ½ அணு குடுத்து விளக்குமாறு வாங்குவானே. நாமே ஏன் ஈர்க்கு சீவிச் செய்யப்படாது. வயலுக்குப்போய் நாமே ஏன் உழப் படாது? வெட்டப்படாது? தோட்டத் துக்கு தண்ணி இறைக்க ஏத்தம் போட கூலியாள் எதுக்காக? இந்த மாதிரி கூடிய வரையில் அவனவனுச் செய்துகொள்ள ணும் வேணுமானல் வேறே யாராவது மற்றவனை சேர்த்துக்கிறது. அவாளுக் கும் நாம் உதவிக்குப் போகிறது. இதிலே காசு மிச்சம், தவிர ஒருவனுக்கு பள பளன்னு கண்ணுக்கு இனிமையாயிருக் கிற வஸ்து மேலே ஆசைவிழும். அப்படி ஆசைபட்டவனுக்கு மனது மயங்கிவிடும். அந்த வஸ்துவை எப்படியும் வாங்கிவிட ணும்னுதான் அவன் ஒரேகாலில்நிற்பான். அதினுல் வரும் லாப நஷ்டம் அப்போது கவனிக்கத் தோணுது. அவசியம் என்ன என்று யோசிக்கமாட்டான். அப்போது வேறு மனிதனுக்கு இது என்னத்திற்கு. வீண் செலவுடா என்றுசொல்லமுடியும். இவனைத் திருத்தி நஷ்டப்படாமல் செய் யலாம். கலியாணம் கார்த்திகையிலே சிக்க னம் செய்ய இந்த மனிதர்கள் நல்ல யோசனை சொல்வார்கள். இது போதும் அது வேண்டாம் என்றமாதிரி ஒருவர் பேச்சு. யோசனையை எல்லாரும் கேட்டு நடந்தால்தான் ஒத்துழைப்பு. (ஆனுல் நல்ல விஷயமும் நல்ல வழிகளும் நல்ல யோசனையும் தெரியுமா?)

"இந்த மாதிரி நடக்காதவனை என்ன பண்றது."

"பின்னுலே அதற்குச் சட்டங்கள் இருக்கோன்னே. அதின்படி அப்படி மீறுகிறவனுக்கு அபராதம் போடறது. அதற்கும் கட்டுப்படாதபோனுல் சபையி லிருந்து நீக்கிவிடறது. ரொம்ப ஊரி லேயே கேவலமாய்ப் போனுல் ஊர்க் காரர்கள் குலாசாரப்படி கேட்டுக்கிருள்"

"சரி மேலே."

"இரண்டாவது மனோதர்ம விருத்தி தெய்வ பக்தி முதலியது அல்லவா? இப்போ எவ்வளவோ, விருதங்கள் அனுஷ்டிக்கிறோமே. அதின் அர்த்தம்" என்ன தெரியுமா? தெரியாது. கோவி லுக்குப் போகிறோம் பூஜைகள் அபிஷே கங்கள் தேர் திருநாள் பார்க்கிறோம். அதன் அர்த்தங்கள் என்ன? தெரியாது. அங்கே ஜபங்கள் நடக்கிறதே. எதற்காக? தெரியாது. அநேக மூர்த்திகள் ஸ்தாப னம் பண்ணியிருக்கே, காரணம் தெரி யுமா? தெரியாது. முன் கோபுரம் மண்ட பம் பலியிடம் துவஜஸ்தம்பம் பிரகாரங் கள் அதில் ஸதாபிக்கப்பட்ட மூர்த்திகள் இதெல்லாம்எதுக்கு? தெரியாது. போகட் டும் நாம் செய்யும் நித்திய கர்மானுஷ் டானங்கள் ஔபாஸனம் அக்னிஹோத் திரம் ஸந்தியா பாராயணம், பகவத்கீதை இவைகளின் பலன் என்ன? தெரியாது

அர்த்தமோ தெரியாது. இன்னம் இந்த மாதிரி எத்தனையோ அர்த்தம் தெரியாமல் கண்ணை மூடிக்கொண்டு புரோகிதர் சொன்னதை தினம் செய்துகொண்டிருக்கிறோமல்லவா (வருஷா வருஷம்) அர்த்தத்தோடே செய்தால் சிரத்தை உண்டாகும் பக்தி உண்டு, முக்தியுண்டு இவைகளெல்லாம் தெரிந்துகொள்ள தக்க பண்டிதர்களை அப்போதைக்கப்போது சந்தித்து தெரிந்துகொள்ளவேண்டும். அப்போதுதான் நம்முடைய மதத்தின் மேன்மைகள் தெரியும். வேறு வழிகளில் போக மனமிசையாது. நம்முடைய மதத்தை எத்தனைபேர் பாதிக்கிறார்கள். நமக்குப் பதில் சொல்லத் தெரியவில்லையா? நம்முடைய பெண்கள் காலமே எழுந்திருந்ததும் வாசல்மெழுகிக் கோலம் போடுகிறாள். அது எதற்கு? பாதிரியார்கள் என்ன சொல்லுதெரியுமா ? பிசாசுகள் பேய்கள் வீட்டிற்குள் வராமலிருக்க இந்தக் கோலம் போடப்படுகிறது. அவைகள் இந்தக் கோலங்களைப் பார்த்து சிலது பயந்து ஓடிப்போயிடுமாம். சிலது எப்படிடா போட்டான் என்று வேடிக்கை பார்த்துக்கொண்டே அங்கே உட்கார்ந்திருக்குமாம் என்று எல்லாம் கேலி பண்ணுகிறார்கள்.

அந்த அரிசிமா நொய்க்கோலம் போடுகிறது எதற்கு என்றால் ஒரு ஹிந்துவின் வீடு எப்போதும் எவ்விதமான அதிதிகளுக்கும் திறந்திருக்கும்(பிராணிகளுக்குக் கூட சின்ன சின்ன ஜெந்துகளுக்குக்கூட) ராத்திரியில் அநேகம் ஜெந்துக்கள் ஆகாரமில்லாமலிருக்குமோனோ. அவைகளுக்கு வேண்டிக்கூட வீட்டுக்கு வெளியிலேகூட கொஞ்சம் ஆகாரத்தை தரை சுத்தம் செய்து வெளியில் வைக்கிறார்கள். எறும்பு காக்கை, குருவி, அணில் எல்லாம் தின்று விட்டுப்போகிறது. இது அசல் தர்ம சிந்தனை யல்லவா? இப்படி ஏற்பட்டதை அர்த்தம் தெரியாமல் மொக்குமா என்று வெள்ளைக்கல் பொடியை அல்லது காரைக் கட்டியை சுண்ணம்பை, நம்ம பொம்மனாட்டிகள் உபயோகிக்கிறாள். பாத்தியா போகிற போக்கை. (ஈகை அதிதி உபசாரம் என்பதே நம் வீட்டு ஸ்திரீகளுக்கு முதல் கைங்கரியமாயிருக்கும்போது( ஒரு கலியாணத்திலே எத்தனையோ ஸத்தியம் செய்து தாலிகட்டறான். பொண்ணும் எத்தனையோ ஸத்தியம் செய்யறாள். அக்னி ஸாக்ஷியாக ஆகாசம் ஸாக்ஷியாக தேவபிராமண ஸாக்ஷி அர்த்தம் தெரியாமல்—கோணவழக்குப் பேசிக்கொண்டு விபரீதமாய்ப் போகிறதுகள். சொல்ற மந்திரங்களின் அர்த்தம் தெரிந்தால் ரொம்ப மோசமிருக்காது. இந்தமாதிரி அநேகம் நாம் தெரிஞ்சுகொள்ளவேண்டும். அதற்கு ஏற்பாடுகள் செய்யணும். நம் நடவடிக்கைகள் சத்தியமாயும் மனச்சாக்ஷிக்கு விரோதமில்லாமல் நடந்துகொண்டோமானால் ஈசுவர பக்தி ஞானம் முதலியவைகளால் நம் ஜன்மம் ஈடேற வழி தேடலாம்.

“ஆமா ஐயா, ரொம்ப தெரிஞ்சுகொள்ளணும் காக்காய்க்கு சாதம்போடறோமே எதற்கு? தெவசம் தர்ப்பணம் எதற்காக? சங்கராந்தின்னு என்ன. ராமகிருஷ்ணர் படம் ஏன் நீலவர்ணமா யிருக்கு? ஜாதி பேதங்கள் எப்படி உண்டாச்சு? பிராணாயாமம் எப்படி? யோகம் செய்கிறது என்கிறாளே என்ன? இந்தமாதிரி ரொம்ப ரொம்ப விஷயங்கள் தெரியாமலே யிருக்கிறோம். (வெறும் முட்டாளாக) சொல்ல சொல்லத்தான் தெரியறது. நம்முடைய வேதங்கள் உபநிஷத்துக்கள், ராமாயணங்கள் தெரிஞ்சுக்கவேணும்” “சரி. மூணாவது வீண்செலவு செய்யாமல் கூடிய வரையில் சிக்கனம் இதைப்பற்றித்தான் முதல் முதலிலேயிருந்து சொல்லிக் கொண்டு வருகிறேன். ஜாஸ்தியாச் சொல்லவேண்டியதில்லை. நீங்களே யோசித்துக்கொள்ளலாம். நாலாவது நம்மகூட இருக்கும் சில கெட்ட வழக்கங்களைச் சீர்திருத்தறது அல்லது தொலைக்கிறது” நம்மளவாள் ஏதாவது தகராறு சண்டை என்றால் வாசலிலே நின்றுகொண்டு கண்டா கண்டபடி வாயில் வரக்கூடாத வார்த்தைகளாலே திட்டுகிறார்களோன்னோ. அதினால் எத்தனை விரோதம் குரோதம் சண்டை அடிதடிகள் ஏற்படறது. இதைக் கட்டுப்பாட்டுக்குள் அடக்கணும். கோள் சொல்லறது

ஒருவரைப்பற்றி அவதூறுப் பேசறது இவைகள் கூடாது; மாரியம்மன் கோவில் அய்யனார் காளிகோவில்களில் ஆடுவெட்டறது கோழி வெட்டறது இந்த ஜீவ ஹிம்சைகளை நிறுத்தணும். காசுவைச்சு சீட்டாடறது, கள் புகையிலை கஞ்சா, காப்பியைக்கூட விட்டுவிடணும். அந்நிய சீமை சாமான் வழக்கத்தை குறைக்கணும். கலியாணத்தின் சில வழக்கங்களைக் குறைக்கலாம் வர வதுவிக்கிரயம் கூடாது. இந்தமாதிரி" 'சரி சரி, இதுகளை ஊர்க்காராள் ஒப்புக்கொள்வாளோ, மாட்டாளோ. இதை ஒரு வரும்படியாக வைத்துக்கொண்டிருக்காள். லாட்டரி பிரைஸ் மாதிரி. 'சரி மேலே சொல்லுங்கோ."


# 1914 - 39

## ஹிட்லரும் - மஹா யுத்தமும்

ஏ. ஜி. வெங்கடாச்சாரியார் எழுதியது.

400-பக்கங்கள் விலை ரூ. 1-4-0

அநேக படங்களுடன்

கனம் டாக்டர். சுப்பராயன் ஸ்ரீ எம். ரத்னசுவாமி இவர்கள் முன்னுரையுடன் கூடியது.

பிருந்தாவன பிரசுராலயம், மயிலாப்பூர்.

பாரதமணி காரியாலயத்திலும், ஏஜண்டுகளிடமும் கிடைக்கும்

கேசரியின் மூன்று இரத்தினங்கள்

# லோத்ரா

கருப்பாசயத்திற்குரிய பலவிருத்தி ஔஷதம்

வலியோடும், காலந்தவறியும் குறைவாகவும், அதிகமாகவும், மாதவிடாய் ஆகுதல், வெள்ளை மலட்டுத்தனம், மூர்ச்சை யடைதல், இடுப்புவலி, தூக்கமின்மை, அஜீரணம் மலச்சிக்கல், இருமல், சுவாசகாசம், தலைவலி, முதுகுவலி முதலியவைகளை குணப்படுத்தும்.

# அமிர்தா

இரத்த சுத்தி ஔஷதம்

இரத்தமின்மை, தளர்ச்சி, நாடித்துடிப்பு, அஜீர்ணம், மலச்சிக்கல், மூளை. பலயீனம், ஞாபக சக்தியின்மை, கண் மங்கல், மூத்திர வியாதிகள், சரும வியாதிகள், சம்போகத்திற் பிரியமின்மை முதலியவைகளுக்கு ஒப்பில்லாதது.

# அர்கா

ஜ்வர நிவாரணி

இன்ப்ளுயன்சா, டைபாய்ட், மலேரியா முதலிய எல்லாவித ஜுரங்களையும், ஈரல், மண்ணீரல், வீக்கம் முதலியவைகளையும் குணப்படுத்தும்.

விபர புத்தகத்திற்கு எழுதுங்கள்.

# கேஸரி குடீரம்

ராயப்பேட்டை, சென்னை.




# ராமுவின் நிலைமை

(ஆர். ஜே. ராமன்)

"கடவுளே, நான் என்ன இவ்வாறே என் காலத்தைக் கடக்கவேண்டுமோ, என்னுடன் படித்த கோமுவும், ராகவனும், நல்ல பதவியிலில்லையா. அவர்கள் மாத்திரம் மாதம் ரூ. 40 சம்பாதிக்கவில்லையா? ஆனால் நானோ என் தாய்தந்தையர்களை இழந்தும் அவர்கள் விட்டுப் போன பணத்தை எல்லாம் வீணாக இக்கல்வியில் செலவிட்டேனே. இப்போது அப்பணமிருந்தால் நான் என் வாழ்க்கையை எப்படி நடத்துவேன்? இவைகளுக்கெல்லாம் காரணம் என் மாமா தான்" என்று இவ்வாறு தனக்குள் ராமு ஒரு நாள் தனிமையாக இருக்கும்போது நினைக்கலுற்றான்.

ராமு தன் தாய் தந்தையர்களை இளமையிலேயே இழந்து அவர்கள் விட்டுப் போன பணத்தைக் கொண்டு தன் மாமாவின் உதவியால் ஸ்கூல்பைனல் வரை படித்துத் தேறியவன். ஆனால் பாடசாலையை விட்டு 4 வருஷம் வரை வேலை எதுவுமே கிடைக்கவில்லை. தற்சமயம் தன் மாமாவின் ஆதரவில் இருந்தான்.

மணி 8 ஆய்விட்டது. அவனுக்கு ஒரே திகைப்பாய் விட்டது. வீட்டிற்கும் அவன் இருந்த இடத்திற்கும் கொஞ்சம் தூரம் இருந்தது. ராமு வீட்டிற்கு வருவதற்குள் மணி 9 ஆய்விட்டது. ராமு தினமும் இவ்வாறு ஊர் திரிந்து வருவது அவன் மாமாவுக்குப் பிடிப்பதே இல்லை. அவனை இன்றைக்கு எப்படியாவது வீட்டை விட்டுத் துரத்திவிட வேண்டுமென்று தனக்குள்ளே நினைத்து அவன்மேல் ஒரே பாய்ச்சலாய்ப் பாய்ந்தார். அளவிலாத வசைமொழிகளை அவர் அவன்மேல் மாரிபோலப்பொழிந்து வீட்டை விட்டே துரத்திவிட்டார். அந்தோ! ராமுவின் கதி என்ன!

ராமுவுக்கு என்ன செய்வதென்று தோன்றவில்லை. உலகத்தில் இவ்வித கஷ்டங்களை அனுபவியாத சிறுகாளை தன் நிலையை நினைந்து நினைந்து கதறலுற்றான். பசியோ வயிற்றைக் கிள்ளிற்று. கடைசியில் தனக்குள்ளே ஒருவாறு தேறி ஓர் திண்ணையில் அனாதையைப் போல் அந்த பயங்கரமான இரவைக் கழிக்க எண்ணினான். ராமுவுக்கு அன்றிரவு முழுவதும் தூக்கமே வரவில்லை. ஒரு பக்கம் தாங்க முடியாத பசி; மற்றொரு பக்கம் தன் அபாய நிலைமை. இவைகள் அவனைத் தூங்கவே விடவில்லை. என்ன செய்வான் பாவம்! கலங்குகிறான், கண்ணீர் விடுகிறான். அவனை ஆற்றுவாருமில்லை, தேற்றுவாருமில்லை. கடைசியில் மனதை ஒருவாறு திடப்படுத்திக்கொண்டு, அவ்வூரை விட்டு வெளியேற உறுதிசெய்து ஆதவனின் வரவை ஆவலோடு எதிர் பார்த்திருந்தான்.

காலை சூர்யோதயம்! தான் நெடுநாள் வாழ்ந்து வந்த தன் ஊரையும் தன் நண்பர்களையும் விட்டு ஒரு புதிய இடத்திற்குத் தனிமையாகப்போக அவன் மனம் சஞ்சலப்பட்டது. இருந்தும் தன் மாமாவின் கொடுமை அவனை அவ்வூரை விட்டுப் போகவே தூண்டிற்று.

ராமு, காலையில், அவ்வூர்க்கருகிலுள்ள ரயில்வே ஸ்டேஷனுக்கு வந்து, அங்கு ஒரு கண்ணியவானின் உதவியால் தன்

பசியைத் தணித்துக் கொண்டான். ரயிலில் போக அவனிடம் பணமில்லாமல் போனாலும் பம்பாய் போகும் வண்டி வந்ததும் அதில் ஏறிவிட்டான். பம்பாய்க்கருகில் ஓர் ஸ்டேஷனில் இறங்கி, அதற்கருகிலிருந்த ஒரு சிற்றூருக்குச் சென்றான். அவ்வூரில் ஏதாவது வேலை கிடைக்குமென்று அலைந்து திரிந்தான். 'துன்பம் தொடர்ந்து வரும்' என்பது போல அவன் சென்ற இடமெல்லாம் அவனைத் தொடர்ந்து வந்தது அவன் அதிர்ஷ்டம். கடைசியில் என் செய்வதென்றும் தோன்றாமல் அவ்விரவைக் கழிக்க ஓர் திண்ணையில் படுத்துக்கொண்டான். அந்நாள் முழுவதும் அவனுக்குப் போதிய உணவே கிடையாது. கடவுளே கதி என்று ஓர் அனாதையைப் போல் படுத்து உறங்கி விட்டான். அப்போது மணி சுமார் 10 இருக்கும்.

அவ்வமயம் அவ்வீட்டு எஜமானர் சாப்பிட்டு விட்டு வெளியே வந்தார். திண்ணையில் வாடிய முகத்துடன் உறங்கும் ராமுவைக் கண்டார். கண்டதும் அவன் பசியால் வாடுகிறானென்று அறிந்து அவனை எழுப்பி அன்னமிட்டு, அவனை யார் என்று விசாரித்தார். ராமு அவருடைய உபசாரத்தையும், அன்பையும் கண்டு அகமகிழ்ந்து தனது வரலாறு முழுவதையும் எடுத்துச் சொல்லி மிகவும் வருத்தப் பட்டான் அவர் ராமுவின் பரிதாப நிலையைக் கேட்டு மனம்வருந்தி, ஆறுதல் கூறி அவனுக்குப் படுக்கை முதலிய சௌகர்யங்களைச் செய்தார்.

இப்புண்ணிய ஆத்மா சங்கரய்யர் என்ற ஓர் பிராமணன். ஆனால் பிராமணனாய் இருந்தபோதிலும் பழைய காலத்து பிராமண வழக்கங்களாகிய தீண்டாமை, ஜாதி மதபேதம், முதலிய கொடிய பழக்கங்களை அறவே வெறுத்தவர். கடவுளின் அவதார புருஷனாகிய காந்திஜியின் சிறந்த தொண்டர். அவருடைய கொள்கைகளைத் தாமே அனுஷ்டித்து மற்றப் பிராமணர்களுக்கு ஓர் வழி காட்டியாக இருக்க வேண்டுமென்பது அவரது எண்ணம். சங்கரய்யர் அச்சிற்றூரில் கைத்தறிச்சாலை ஒன்று ஏற்படுத்தி அநேக ஏழைகளுக்கு வேலை கொடுத்து அதை நடத்துபவர். அவருக்கு கிராம அபிவிருத்தியில் ஆசை அதிகம். தான் வாழும் கிராமத்துக் குடிகளுக்கு அவ்வப்போது பொதுக் கூட்டங்கள் ஏற்படுத்தி உலக விஷயங்களை எடுத்துரைப்பார். அக்கிராம வாசிகளுக்குச் சிறிதளவு கல்வி கற்பித்து அவர்களை முன்னேற்ற வேண்டுமென்பது அவரது பேரவா. ஆனால் அவருக்குத் துணையும், ஓய்வும் இல்லாததால் தன் ஆசையை நிறைவேற்ற இயலவில்லை. அன்றிரவு ராமு இச்செயலில் தனக்கு உதவக் கூடுமென்றெண்ணி, விடிந்ததும் அவனிடம் வந்து தன் எண்ணத்தைத் தெரிவித்து அவன் இசைந்தால், அவனுக்கு உணவும் மாதம் கொஞ்சம் பணமும், கொடுப்பதாகச் சொன்னார். இதைக் கேட்டதும் ராமுவுக்குப் பரமானந்தம் உண்டாயிற்று. தன் மனமாறக் கடவுளை வாழ்த்தி, சங்கரய்யரின் வேண்டுகோளுக்கு வெகு ஆவலுடன் சம்மதித்தான். அன்று முதல் ராமு சங்கர ஐயருக்கு அவரது தறிச்சாலையில் மிகுந்த உதவி புரிந்து வந்தான். சில நாட்களுக்குள் சங்கரஐயர் அக்கிராம வாசிகளின் உதவியால் ஒரு சிறிய பாடசாலை அமைத்தார். பிறகு அக்கிராம வாசிகள் சிலரையும், ஹரிஜனங்கள் சிலரையும் சேர்த்து ஓர் இரவு பாடசாலையை ஆரம்பித்தார். ராமு அச்சாலையை அதிக ஊக்கத்துடனும், சாமர்த்தியத்துடனும் சங்கரய்யரைக் கொண்டு, அதிவிமரிசையாக நடத்தி வந்தான். இவ்வாறு 3 ஆண்டுகள் கழிந்தன. பாடசாலையின் சிறப்பையும் அதில் கற்பவரின் ஊக்கத்தையும் கண்டு பம்பாய் அரசாங்கத்தார் அப்பாடசாலைக்கு வருஷத்திற்கு ரூ. 800 இலவசமாக அளித்தார்கள்.

சங்கரய்யரும் ராமுவும் அப்பணத்தின் உதவியால் இன்னும் இரண்டு உபாத்தியாயர்களை வைத்து, மாணவர்களைப் பெருகச்செய்து அப்பள்ளியை அதிக உன்னத நிலைக்குக் கொண்டுவந்து விட்டார்கள். இது நிற்க.

சங்கரய்யருக்கு விஜயா என்ற ஒரே பெண் இருந்தாள். விஜயா, சிறுவயதிலே

கல்வி நன்கு கற்றவள். நற்குணமுடையவள். அவளிடம் அழகும் அதற்கேற்ற குணமும் ஒன்றுக்கொன்று தாண்டவமாடின என்றே சொல்லலாம். விஜயா, ராமுவின் குணங்களையும், அவன் தியாகங்களையும் கண்டு அவன் மேல் தீராக் காதல் கொண்டாள். அவள் காதல் நாளுக்கு நாள் காட்டுத்தீ போல் அதிகரித்தது. தனக்குச் சமயம் வாய்த்த போதெல்லாம் தன் காதலை ராமுவுக்கு மறைமுகமாக அறிவிப்பதுண்டு. ஆனால் ராமு அவளைப் பொருட்படுத்துவதும் கிடையாது. அவளுக்கு இடங்கொடுத்தால் சங்கரய்யர் என்ன கோபிப்பாரோ என்று பயந்தான். சங்கரய்யருக்கு ராமுவின் மேல் அளவிலாத அன்பு. தனக்கு உபகாரம் செய்தவருக்கு ஒருபோதும் அபகாரம் செய்யக்கூடாதென்று கருதினான். ஒரு நாள் ராமு தனிமையாக இருக்கக்கண்டு விஜயா, இதுதான் சமயமென்றெண்ணி, அவனை ஒரே பிடியாய்ப் பிடித்துக்கொண்டு தன்னைக் கட்டாயம் அங்கீகரித்தே தீரவேண்டுமென்று மன்றாடினாள். ராமுவுக்கு என்ன செய்வதென்றும் தோன்றவில்லை. உள்ளத்தில் மிகவும் அச்சம் கொண்டு, "விஜயா, உன் தகப்பனாருக்கு இது தெரிந்தால் என்னைச் சும்மா விடுவாரா? எனக்கு எவ்வளவோ உதவி புரிந்து தகப்பனாரினும் மேன்மையாகக் காப்பாற்றுகிறார்.

"உபகாரம் செய்தவர்களுக்கு அபகாரம் செய்வதா, 'உப்பிட்டவரை உள்ளளவும் நினை' என்பது உனக்குத் தெரியாததா? அவருடைய விருப்பமில்லாமல் ஒருபோதும் உன் எண்ணம் நிறைவேறாது. மேலும் நீயோ ஓர் பிராமணப் பெண். ஆனால் நானோ...!" என்று பயந்து அவ்விடத்தைவிட்டுப் போய் விட்டான்.

அன்றுமுதல் விஜயாள், இராமுவின் சொற்களை நினைந்து நினைந்து மனம் வருந்தினாள். வேளைக்குச் சாப்பிடுவதும் கிடையாது. ஆகையால் அவளது தாமரை போன்ற திருமேனி வரவர வாட ஆரம்பித்தது.

சில தினங்களுக்குள் விஜயாளின் கருத்து சங்கரய்யருக்குத் தெரிய வந்தது. அவருக்கும் தன் அன்புள்ள மகளை ராமுவிற்குக் கலியாணம் செய்வித்துத் தனக்கு மகன் இல்லாததால், தன் வீட்டிலேயே வைத்துக்கொள்ள எண்ணம். ஆனால் ராமுவின் குலத்தை அறிந்து தன் சுற்றத்தார் இதற்குச் சம்மதியாரே என்று சிறிது அஞ்சினார். சங்கரய்யர் காந்திஜியின் சிறந்த பக்தர். காந்திஜீயானவர், மாணிக்கவாசகர், இயேசு, மகம்மது இவர்களைப் போன்ற கடவுட் புருஷனென்றும், மேற்சொன்னவர்களைக்காட்டிலும் காந்திஜியின் கொள்கைகள் சிறந்தனவென்றும் எண்ணி ஜாதிபேதம், தீண்டாமை முதலியவைகளை ஒழித்து மற்ற பிராமணர்களுக்கு ஓர் வழி காட்டியாக வேண்டுமென்று அவர் நினைத்தார்.

இவ்வாறு தனக்குள்ளே தீர்மானித்து, ஓர் நல்ல நாள் ஏற்படுத்தி ராமுவுக்கும் தன் மகள் விஜயாளுக்கும் சுப முகூர்த்தத்தில் திருமணம் செய்வித்தார். தேவர்கள் பூமாரி பொழிந்தார்கள். காந்திஜியும் சங்கரய்யரின் தைரியத்தையும், தேச பக்தியையும் பாராட்டி அவருக்கு ஆசி அனுப்பினாராம்.

(நாமும் சங்கரய்யரைப் போல் காந்திஜீயையும் அவரது கொள்கைகளையும் பின்பற்றி; ராமுவைப்போல் கிராம அபிவிருத்தியில் ஈடுபட்டு நம் தேசம் சீக்கிரத்தில் விடுதலையடைய முயற்சிப்போமாக.)

# சினிமாச் சுருள்

(எஸ். எஸ்.)

பாவம்! இந்த முப்பது நாட்களாய் பக்த கோடிகளிடம் அகப்பட்டுக்கொண்டு திருநீலகண்டர் எப்படித்தான் சமாளித்து வருகிறாரோ தெரியவில்லை. விபூதி கொடுத்துக் கைதான் அலுக்காதோ, அல்லது ஆசீர்வாதம் செய்து செய்து, வாய்தான் வலிக்காதோ என்ற சர்ச்சைகள், ஒருங்கேகூடி தர்க்கிக்க ஆரம்பித்து விட்டன. பாகவதர், பாப்பா, ஆகிய இருவரும், ரஸிகர்கள் அப்படியே சொக்கி, மெய் மறந்து போகும் வண்ணம், கானத்தைப் பொழிகிறார்களாம். போதும் போதாதற்கு நாயனார், தன் தேகத்திலிருந்து பல் வேறு சக்திகளை, உற்பத்தி செய்து, கன்யாகுமரி முதல் பம்பாய் உள்பட பல இடங்களில் அங்கங்கே இருக்கும் பக்த கோடிகளுக்கு காட்சியளித்து வர ஏற்பாடு செய்திருக்கிறாராம். சிஷ்யர்கள் அதிகமாயுள்ள, தென் இந்தியாவில் தான் அமோகமான வரவேற்பென்றால், தமிழ் தெரியாத பம்பாயில்கூட, அல்லோலகல்லோலப் படுகிறதாம் நாயனாரின் வரவேற்பு! அப்படியென்றால் தியாகராஜ பிலிம்ஸாரின் யோகமே யோகம். நகரில் உள்ள மகாஜனங்கள் எல்லாம், (ஒரு பாகம் மட்டும்) தரிசனம் செய்து முடிய குறைந்தது இன்னும் இருபது வாரங்களாவது ஆகுமென்றும், அதுவரையில் நாயனார் பாரகானில்தான் வீற்றிருக்கப் போகிறாரென்றும் சினிமா வானில் வதந்தி ஒன்று வீசிக்கொண்டிருக்கிறது.

கந்தவேள் பிலிம்ஸ்

இது திருவல்லிக்கேணி — நெ. 21. அருணாசலாசாரி தெருவில் நூதனமாக ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இக்கம்பெனியார் ஒரே மூச்சில் இரண்டு படங்கள் எடுக்கப்போகிறார்களாம். ஒன்று புராணக்கதை. மற்றொன்று சமூகக்கதை. புராணப் படம்—ஸ்ரீ—வரகவி—திரு. அ. சுப்ரமண்ய பாரதியார் எழுதிய "மாயாவதி". சமூகப் படம்—ஸ்ரீ. எம். பி. பூரண்சிங் எழுதிய "நமது கணவன்" என்னும் நாவல். டி. ஷண்முகம் ("பக்த அருணகிரி" உதவி டைரக்டர்) இப் படங்களை டைரெக்ட் செய்வார். எம். பி. பூரண்சிங்கும் வி. வி. கோபாலஸ்வாமி ஐயங்காரும் உதவி டைரக்டர்களாம். ஸி. சங்கரலிங்கம் ("அருணகிரி" புகழ்), டி. ஆர். நாராயணன் ("கந்தலீலா" புகழ்) மாஸ்டர்—பி. ஆர். மோகன், ஸ்ரீமதி—ஸரஸ்வதி, சித்தனி—ராஜலக்ஷ்மி முதலியவர்கள் இந்த இரண்டு படங்களிலும் நடிப்பார்களாம்.


குமார சஞ்சீவினி
ரிஜிஸ்டர்ட்
குழந்தைகளின்
ஈரல்-குலை-ஜுரக்கட்டி
வியாதிகளுக்கு
அண்ணாமலை
வைத்தியரின் மருந்து நிகரற்ற குணமுடையது
☞ வைத்தியர். அண்ணாமலை முதலியார்
வைத்தியர் அண்ணாமலை தெரு, மயிலாப்பூர், சென்னை


திரைக்குத் தயார்

★

# மன்மத-விஜயம்

ஸ்ரீ எம். சுப்ரமணியன்
மன்மதன்

கே. அரங்கநாயகி
இரதி



பேபி-லலிதா
நடனம்

★

ஸ்டுடியோ:
ஜயா பிலிம்ஸ்

பிரஸிடென்ஸி
அமெட்சூர்ஸ்

டைரக்ஷன்:
ஜி. பட்டுவையர்

இன்ஷூர்
செய்யவும்
*
ஏஜென்ஸி
வாங்கவும்

# ஹிந்துஸ்தான்

சமமான வயதுள்ள கம்பெனி
களுக்குள் மிகவும் முற்போக்
குள்ள இன்ஷூரன்ஸ் கம்பெனி.

முன்னேற்றத்தின் அத்தாட்சி

புது பிஸினெஸ் (1938-39)
ரூ. 3 கோடி 10 லக்ஷத்துக்கு மேல்

அமுலிலுள்ள பாலிஸிகள்
ரூ. 14 கோடி 60 லக்ஷத்துக்குமேல்

ஆயுள் நிதி
ரூ. 2 கோடி 67 லக்ஷத்துக்குமேல்


மொத்த சொத்துக்கள்
ரூ. 2 கோடி 97 லக்ஷத்துக்குமேல்

பிரதிநிதிகள் இல்லாத இடங்களில் ஏஜென்ஸிகள் தரப்படும்.

ஹிந்துஸ்தான் கோவாபரேட்டிவ்
இன்ஷூரன்ஸ் ஸொஸைடி
லிமிடெட்.

ஹெட் ஆபீஸ் :
ஹிந்துஸ்தான் பில்டிங்ஸ்
சுரேந்திரநாத் பானர்ஜி ரோட்,
கல்கத்தா.

சென்னை பிராஞ்சு :
ஹிந்துஸ்தான் பில்டிங்ஸ்
107, அரமனைக்காரத் தெரு,
மதராஸ்.



AMRUTANJAN
எல்லா
நோவுகளையும்
தீர்க்கும்
அமிர்தாஞ்சனம்
உத்தமம்
பாரத மணி.




குற்றமில்லாத
தோற்றத்திற்கு
மைசூர் சந்தண சோப்
பைப்போல் நல்லது
வேறொன்றுமில்லை
அதை உபயோகித்தால் சருமம்
வெண்மையாயும் மிருதுவாயும்
ஆகிறது.
MYSORE
Sandal
SOAP
GOVT. SOAP FACTORY, BANGALORE.
HEYCOCK CO.


**மைசூர் சந்தண சோப்.**